بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡد

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

**Weekly BADAR Qadian Tamil**

தொகுதி 7

இதழ் 46

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - ரபீயுஸ்ஸானீ 21 ★ நுபுவ்வத் 17 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 17 நவம்பர் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَلَوۡ تَرٰۤی اِذۡ وُقِفُوۡا عَلَی النَّارِ فَقَالُوۡا یٰلَیۡتَنَا نُرَدُّ وَلَا نُکَذِّبَ بِاٰیٰتِ رَبِّنَا وَنَکُوۡنَ مِنَ الۡمُؤۡمِنِیۡنَ

**பொருள் :**

நரகத்திற்குமுன் அவர்கள் நிறுத்தப்படும்போது நீர் அவர்களைக் கண்டால், அந்தோ! நாங்கள் மீண்டும் (உலகிற்கு) அனுப்பப்பட்டால் நலமாக இருக்குமே. (அவ்வாறாயின்) நாங்கள் ஒருபோதும் எங்கள் இறைவனின் அடையாளங்களைப் பொய்யாக்க மாட்டோம். மேலும் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருப்போம் என்று அவர்கள் கூறுவார்கள்.

(அல்அன்ஆம்:28)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**எல்லாருக்கும் நன்மை செய்யுங்கள். மேலும், இறைவனின் அனைத்து படைப்பினங்களுக்கும் நன்மை செய்யுங்கள். இதுவே நமது விதிமுறையாகும். ஆட்சியாளருக்கு கட்டுப்படுவதும், நன்றியுணர்வும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

### நிரந்தரமான மருந்து எதுவும் இல்லை

1889 ஆண்டு: எங்களது வீட்டில் மிர்ஸா சாஹிப் (அதாவது தமது கண்ணியத்திற்குரிய தந்தையார்- மிர்ஸா குலாம் முர்தஸா சாஹிப் மர்ஹூம் ஆவார்கள்) ஐம்பது வருடங்கள் வரை சிகிச்சை வழங்கிக் கொண்டிருந்தார்கள். அன்னார் இந்த மருத்துவக் கலையில் மிகவும் பிரபலமாகியிருந்தார்கள். ஆனால், நிரந்தரமான எந்த மருந்தும் இல்லை என்பது அன்னாரது கூற்றாக இருந்தது. உள்ளபடியே அன்னார் உண்மையைக் கூறியுள்ளார்கள். ஏனெனில், மனிதனுக்குள் செல்லும் எந்த ஒரு துகளும் அல்லாஹ்வின் அனுமதியின்றி எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

### ஆட்சியாளர்கள் மற்றும் உறவினர்களுடன் அழகிய முறையில் நடத்தல்

ஆட்சியாளர்கள் மற்றும் உறவினர்களுடன் எப்படி நடக்க வேண்டும்? என்று ஒரு நபர் கேட்டார். கூறினார்கள்: எல்லாருக்கும் நன்மை செய்யுங்கள். மேலும், இறைவனின் அனைத்து படைப்பினங்களுக்கும் நன்மை செய்யுங்கள். இதுவே நமது விதிமுறையாகும். ஆட்சியாளருக்கு கட்டுப்படுவதும், நன்றியுணர்வும் ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் கடமையாகும். அவர்கள் நம்மை பாதுகாக்கின்றனர். மேலும், எல்லா வகையான மார்க்க சுதந்திரமும் நமக்கு வழங்கியுள்ளனர். அரசாங்கத்திற்கு உண்மையான உள்ளத்துடன் கட்டுப்படாதவரையும், நன்றியுணர்வை காட்டாதவரையும் நான் மிகவும் ஈமான் அற்றவராக கருதுகின்றேன்.

உறவினர்களுக்கு உரிமைகள் உள்ளன. ஆயினும், அல்லாஹ்வின் திருப்திக்கெதிரான விஷயங்களில் அவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 413, காதியான் பதிப்பு 2008)

## நபிமொழி

**உங்களில் எவர் கடனை சிறந்த முறையில் திருப்பிக் கொடுக்கின்றாரோ அவரே மிகச் சிறந்தவர் ஆவார்.**

(2305) ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஒரு நபருடைய ஒரு வயது ஒட்டகக் குட்டி,ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது கடனாக இருந்தது. அன்னார் (ஸல்) அவர்களிடம் அதனை திரும்பிக் கேட்பதற்கு அந்த நபர் வந்தார். அன்னார் (ஸல்) கூறினார்கள்: அதனை கொடுத்துவிடுங்கள். அவர்கள் அந்த வயது ஒட்டகத்தை தேடினார்கள். ஒரு வயது ஒட்டகம் கிடைக்கவில்லை. அதை விட பெரிய வயது ஒட்டகமே இருந்தது. அன்னார் (ஸல்) கூறினார்கள்: அவருக்கு (பெரிய வயதுடைய ஒட்டகத்தையே) கொடுங்கள். தாங்கள் (ஸல்) எனக்கு உரிமையானதை விட அதிகம் கொடுத்துவிட்டீர்கள். அல்லாஹ் தங்களுக்கும் அதிகரித்து கொடுக்கட்டும் என்று அந்த நபர் கூறினார்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவர் கடனை சிறந்த முறையில் திருப்பிக் கொடுக்கின்றாரோ அவரே உங்களில் சிறந்தவர் ஆவார்.

(புகாரி தொகுதி 4, பாடம் வகாலத், காதியான் பதிப்பு 2008)

**பழிவாங்குவதால் மனிதனின் கோபம் மட்டுமே நீங்கும். ஆனால் பொறுமையை மேற்கொண்டால் அவரது ஆன்மீகத்தில் முன்னேற்றம் ஏற்படும்**

وَاِنۡ عَاقَبۡتُمۡ فَعَاقِبُوۡا بِمِثۡلِ مَا عُوۡقِبۡتُمۡ بِہٖ ؕ وَلَئِنۡ صَبَرۡتُمۡ لَہُوَ خَیۡرٌ لِّلصّٰبِرِیۡنَ

பொருள்: நீங்கள் (அநீதி இழைத்தவர்களுக்குத்) தண்டனை வழங்கினால், உங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் அளவிற்கே, நீங்கள் தண்டனை வழங்க வேண்டும். ஆனால், நீங்கள் பொறுத்துக் கொண்டால், நிச்சயமாக அது பொறுமையுடையோருக்கு மிகச் சிறந்ததாகும். .(அந் நஹ்ல்:126)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு கூறுகின்றார்கள்:

உங்களுடைய எதிரிகள் நுட்பமான ஞானத்துடன் கூடிய அழைப்பை மறுப்பது மட்டுமல்லாமல், உங்களை கொலை செய்வதற்காக வாள் ஏந்துகின்றார்கள் என்றால் மட்டும் என்பதே இந்த வசனத்தின் பொருள் ஆகும். எனவே, அப்படிபட்ட நிலைமை இருந்தால் நீங்களும் உங்களை தற்காத்துக் கொள்வதற்காக வாள் ஏந்துவதற்கு உங்களுக்கு அனுமதி உள்ளது என்று அல்லாஹ் கூறியுள்ளான்.....

ஆயினும், இந்த அறிவுரையை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது அவசரப்படக் கூடாது. மேலும், முதலில் பொறுமையின் முன்னுதாரணத்தை வெளிப்படுத்தவும். பின்னர் வேறு வழியே இல்லையென்றால் போரிடவும். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இந்தக் கட்டளையை முழுமைபடுத்தினார்கள்.

இது திருக்குர்ஆனின் எவ்வளவு பெரிய சிறப்பென்றால், வரம்பு மீறுதலுக்கான சாத்தியக் கூறு எஞ்சியிருக்கக் கூடாது என்பதற்காக ஜிஹாதிற்கான கட்டளை வழங்குவதற்கு முன்னர் அதன் எல்லைகளையும், நிபந்தனைகளையும் எடுத்துரைக்க துவங்கிவிட்டது. பொறுமையின் விளைவு சிறந்தாக இருக்கும்.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 4, பக்கம் 274, காதியான் பதிப்பு 2010)

* * * * *

## இந்த இதழில்


- திருக்குர்ஆன்
- நபிமொழி
- மல்ஃபூஸாத்
- தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை)
- குத்பா பேருரை — ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை ( 21 அக்டோபர் 2022 )
- குத்பா பேருரை — ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் குத்பா பேருரை (14 அக்டோபர் 2022-நிறைவு பகுதி)



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**சமீபத்திய அமெரிக்க சுற்றுப் பயணத்தால் அஹ்மதிகளிடம் ஏற்பட்ட தாக்கங்கள், ஜமாஅத் அல்லாத மக்களின் கருத்துகள், மேலும் இந்த சுற்றுப் பயணத்தின் விளைவால் இறங்கிய எண்ணற்ற இறையருட்கள் மற்றும் ஈமானை வலுவூட்டும் நிகழ்வுகளைப் பற்றிய குறிப்புகள்**

**எனது உளமார்ந்த விருப்பம் என்னவென்றால், இந்த பள்ளிவாசல் இந்த நகரத்திற்கு மட்டுமல்லாமல் நாலாப்புறமும் நம்பிக்கையின் ஒளிக்கதிராக திகழ வேண்டும். (மதிப்பிற்குரிய ஜோயிஸ் மேஸன், இல்லியான்ஸின் உறுப்பினர்)**

**சமூகத்தில் பகைமையுணர்வு கொண்ட நபருக்கு எந்த இடமுமில்லை என்ற இமாம் ஜமாஅத் அவர்களின் தூதுச் செய்தி மிக அருமையானது...... நம்மிடம் உள்ள ஆயுதம் துஆ எனும் ஆயுதே ஆகும் என்ற இமாம் ஜமாஅத் அவர்களின் இந்தக் கூற்று எனக்கு மிகவும் பிடித்திருந்தது. (ஒரு விருந்தினர்)**

**தங்களின் பள்ளிவாசல் எங்களது சமூகத்திற்கு நம்பிக்கை மற்றும் நட்பிற்கான ஊடகமாகும் (ஒரு விருந்தினர்)**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்டு, இங்கிலாந்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 21 அக்டோபர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு அகா மாதம் **21ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○

நீங்கள் அறிந்ததைப் போன்று நான் கடந்த நாட்களில் அமெரிக்காவின் சில ஜமாஅத்துகளுக்கு சுற்றப் பயணத்தில் சென்றிருந்தேன். MTA-மூலமாகவும், ஜமாஅத்தின் எலக்ட்ரானிக் மீடியா மூலமாகவும் செய்திகள் வந்து கொண்டிருந்தன. இந்த சுற்றுப் பயணம் அல்லாஹ்வின் அருளால் மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. எவ்வாறு இருப்பினும், இதனை தவிர, மற்ற உலக சேனல்களும் இதற்கு மிக அதிக அளவில் கவரேஜ் கொடுத்து வந்தன.

நம்மவர்களிடத்திலும், மற்றவர்களிடத்திலும் இந்த சுற்றுப் பயணத்தின் நல்ல தாக்கம் ஏற்பட்டுள்ளது. ஓர் இளைஞர் தனது ஒரு நண்பரிடத்தில், எனது மூளையில் ஜமாஅத் மற்றும் கிலாஃபத்தைக் குறித்து சில விஷயங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. சில சந்தேகங்கள் இருந்தன. இந்த சுற்றுப் பயணத்தின் காரணமாக அவை தற்போது முற்றிலும் தீர்ந்து விட்டன. இதுபோன்ற ஏராளமான நேர்மறை தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. அடுத்து, மக்களுடன், பிள்ளைகளுடன், பெண்கள் மற்றும் ஆண்களுடனான சந்திப்பிற்கு பிறகு ஏற்பட்ட உணர்வுப்பூர்வமான தாக்கங்களின் நமது ஒரு நீண்ட பட்டியல் உள்ளது. அதனை அறிக்கைகளில் நீங்கள் படித்துக் கொண்டிருப்பீர்கள். பின்னர், சீயோனிலும், டேலஸிலும் மற்றும் மேரிலேண்ட் பைத்துர் ரஹ்மானிலும் தொழுகைக்காக பெண்கள், குழந்தைகள் மற்றும் ஆண்களின் வருகையின் எண்ணிக்கை மிக அதிகமானதாக இருந்தது. நான் வரும்போதும், செல்லும்போதும் தமது உணர்வுகளை அவர்கள் வெளிப்படுத்தி வந்ததிலிருந்து அவர்களின் உள்ளங்களில் கிலாஃபத்துடன் நேசமிகு தொடர்பு உள்ளது: மேலும், தூய்மையும், நன்றியுணர்வும் உள்ளது என்பது தெளிவாக தென்பட்டுக் கொண்டிருந்தது. படித்த மக்களும், செல்வந்தர்களும், உலகியல் பணிகளில் மும்முரமானவர்களும், தொழுகைக்காக பள்ளிவாசலில் இடம் கிடைத்து விடவேண்டும் என்பதற்காக நீண்ட வரிசையில் நின்று கொண்டிருந்தனர். ஓய்வில் இருந்த மக்கள் வந்துவிட்டனர் என்பதல்ல. அவர்களிடத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் அல்லது அவர்களின் நடைமுறை இந்த விஷயத்தின் வெளிப்பாடாகும். அதாவது அல்லாஹ்வின் அருளால் மார்க்கம் மற்றும் ஜமாஅத்தின் மீது அவர்களின் உள்ளங்களில் அன்பு உள்ளது. அவர்களின் உள்ளங்களில் கிலாஃபத்துடன் தொடர்பு உள்ளது. 11, 12 வயதுள்ள பிள்ளைகள் 5மணி நேரம் வரிசையில் நின்று கொண்டிருந்தார்கள். பரிசோதனை மற்றும் கோவிட் டெஸ்ட் ஆகியவற்றின் காரணமாக தாமதமாகி வந்தது. ஆயினும், ஒருபோதும், எவரும், விருந்தினர்களும் சரி, நம்மவர்களும் சரி எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை. இன்னும் கூறப்போனால், நம்மவர்கள் ஜமாஅத் அமைப்பிற்கு முழுமையான கட்டுப்படுதலையும், தூய்மை மற்றும் நன்றியுணர்வின் முன்னுதாரணங்களையும் வெளிப்படுத்தினர். சீயோனில் ஒரு விருந்தினரும் கூட இந்த விஷயத்தைக் கண்டார். மேலும் அவர் கூறினார்: எவ்வளவு சீராக அமைப்பு நடைபெறுகிறது என்பதை நான் பார்த்தேன். முறையாக பரிசோதனை நடந்து கொண்டிருந்தது. நேரம் ஆகிக் கொண்டிருந்தது. ஆனால் அதன் பிறகும் எவரும் ஆட்சேபனை செய்யவில்லை.

11, 12 வயதான ஒரு சிறுவனின் தாயும், தந்தையும் என்னிடம் கூறினார்கள்: எங்களது மகன் தாங்கள் வருகை தந்தது முதல் மஸ்ஜிதிற்கு வருவதற்காக 5 மணிநேரம் முன்பே வந்து வரிசையில் நின்று கொண்டார். வேறு எந்த விஷயத்தைப் பற்றியும் கவலையில்லை. ஆனால் இதற்கு முன்னர் அவர் இந்த ஆர்வத்துடன் தொழுகைகளில் ஒருபோதும் வந்ததில்லை. எவ்வாறு இருப்பினும், குழந்தைகள், சிறுவர்கள், சிறுமியர்கள் மற்றும் அனைவரிடத்திலும் நான் மகிழ்ச்சியின் வெளிப்பாட்டின் தொடர்பைக் கண்டேன். இது ஜமாஅத்தின் மீது அல்லாஹ்வின் அருளாகும். ஒவ்வொரு இடத்திலும் தொழுகைகளில் இருந்த மக்களின் வருகை என்பது நிர்வாகத்தினரின் எதிர்ப்பார்ப்புகளையும் விட அதிகமானதாக இருந்தது.

பள்ளிவாசல்களுடனான இந்த தொடர்பும், இறை வணக்கத்திற்கான இந்த ஆர்வமும் அவர்களிடம் நிரந்தரமானதாக ஆகிவிடுவதற்கும், எப்போதும் நிலைபெற்றிருப்பதற்கும், பள்ளிவாசல்கள் எப்போதும் நிறைந்திருப்பதற்கும் அல்லாஹ் அருள் செய்வானாக.

அமெரிக்கா போன்ற நாட்டில் மக்கள் மார்க்கத்தை மறந்து விடுகின்றனர் என்பது மக்களின் எண்ணமாக உள்ளது. ஆனால், பெரும்பாலனவர்களிடம் இதன் பக்கம் கவனமும், கவலையும் இருப்பதை என்னால் பார்க்க முடிந்தது. பொருள் தியாகங்களில் பலவீனமானவர்கள் கூட தாங்களும், தங்களது பிள்ளைகள் மற்றும் சந்ததிகளும் மார்க்கத்துடனும், கிலாஃபத்துடனும் இணைந்திருப்பதற்காக குறிப்பாக துஆவிற்கு விண்ணப்பித்து வந்தார்கள்.

அல்லாஹ் அமெரிக்க ஜமாஅத் உறுப்பினர்களின் தூய்மையையும், நன்றியுணர்வையும் எப்போதும் அதிகரித்துக் கொண்டு இருப்பானாக.

அதேபோன்று லஜ்னா, குத்தாம், அன்சார் இன்னும் கூறப்போனால், பிள்ளைகளும் இந்த காலத்தில் கடின உழைப்புடன் தங்களது டியூட்டிகளை கொடுத்தனர். பெண்களும், ஆண்களும் பற்பல நாட்கள் கண் விழித்து ஏற்பாடுகள் செய்தனர். நான் கூறியதுபோன்று எல்லா இடத்திலும் அல்லாஹ்வின் அருளால் மக்களின் வருகையும் மிக அதிகமாக இருந்தது. வருகை ஆயிரக்கணக்கில் இருந்தது. மேலும், பைஅத்துர் ரஹ்மானில் மக்களின் வருகை என்பது ஜலஸாவில்

மக்களின் வருகையை விட அதிகமாக இருந்தது. ஆனாலும், மிகவும் முறையான நிர்வாக வழிமுறைகளால் அவர்கள் தமது பணிகளை நிர்வகித்து விட்டனர். அமெரிக்க ஜமாஅத் உறுப்பினர்களின் தூய்மை மற்றும் நன்றியுணர்வின் இந்த தரத்தை அல்லாஹ் எப்போதும் அதிகரித்துக் கொண்டே இருப்பானாக. மேலும், இந்த மாற்றங்கள் தற்காலிகமானதாக அல்லாமல் நிரந்தரமானதாக இருக்க அல்லாஹ் அருள் செய்வானாக.

தற்போது நான் ஜமாஅத்தைச் சாராதவர்களின் சில தாக்கங்களை எடுத்துரைப்பேன். அல்லாஹ் ஜமாஅத்தைச் சாராதவர்களின் உள்ளங்களிலும் அசாதாரண தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளான். அவர்களின் உள்ளங்களையும் அல்லாஹ் திறப்பானாக. மேலும்,இந்த மக்கள் உண்மையை அடையாளம் காண்பவர்களாக ஆகிவிடட்டுமாக. எவ்வாறு இருப்பினும் நான் சிலரின் தாக்கங்களை எடுத்துரைக்கின்றேன்.

சீயோனில், ஃபத்ஹே அஸீம் என்ற பள்ளிவாசல் கட்டப்பட்டுள்ளது. அது தொடர்பான விஷயங்கள்: அங்கு நடைபெற்ற நிகழ்ச்சியில் முஸ்லிம் அல்லாத மற்றும் ஜமாஅத்தைச் சாராத 161 நபர்கள் கலந்து கொண்டனர். அதில் காங்கிரஸ் மேன், காங்கிரஸ் வூமன், மேயர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள், வழக்குரைஞர்கள், பொறியாளர்கள், பாதுகாப்புத் துறையின் பிரதிநிதிகள் மற்றும் வாழ்க்கையின் பல்வேறு துறைகளுடன் தொடர்பு கொண்டவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

சீயோன் நகரத்து மேயர் மதிப்பிற்குரிய பில்லி மேகன்னீ (Billy Mckinney) தமது உரையில் குறிப்பிட்டார்:

ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசல் திறப்பின் சந்தர்ப்பத்தில் சீயோன் நகரத்தில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவரை நான் வரவேற்பது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும். அவர் கூறினார்: Historic past and dynamic future வரலாற்றுச் சிறப்பு மிக்க கடந்த காலம் மற்றும் ஆற்றல் மிக்க எதிர்காலம் என்பது எங்களது (motto) குறிக்கோள் ஆகும். எங்களது நகரத்தின் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்த பள்ளிவாசல் அந்த motto-விற்கு சிறந்த உதாரணமாகும்.

அவர் மேலும் கூறுகின்றார்: இந்த வணக்கத்தலம் நமது கடந்த காலம் மற்றும் எதிர்காலத்திற்கு மத்தியில் ஒரு பாலத்திற்கான பணியை செய்யவேண்டும் என்பது விருப்பமும், பிரார்த்தனையும் ஆகும்.

இந்த பள்ளிவாசல் மிகவும் அழகிய ஈமானால் நிறைந்த சமூகத்தின் பிரதிநிதிகளால் நிறைந்துள்ளது என்பதை அறிந்து சீயோன் நகரத்தின் எதிர்காலம் குறித்து எனக்கு மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்துகின்றது. அஹ்மதிய்யா சமூகம் இந்த நகரத்திற்கு எடுத்து வந்துள்ள இந்த தூதுச் செய்தியைப் பார்த்து எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. ஆக, மற்றவர்களுக்கு இவ்வாறு நம்மைக் குறித்து நம்பிக்கை உருவாகி வருகிறது.

அடுத்து அவர் கூறுகின்றார்: இது எப்படிபட்ட ஜமாஅத் என்றால், இது இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களை கண்ணியப்படுத்துகின்றது. அன்னார் (ஸல்) கிறிஸ்த்தவர்களுடன் உடன்படிக்கை செய்திருந்தார்கள்.

பின்னர், தொடர்ந்து அவர் கூறுகின்றார்: அஹ்மதிய்யா சமூகத்தின் சார்பாக இந்த நகரத்தில் ஆற்றப்பட்ட சிறப்பான தொண்டுகளுக்காகவும், இந்த நகரத்தின் முன்னேற்றத்திற்காகவும் மற்றும் அதன் குடிமக்களின் நன்மைக்காகவும் செய்யப்பட்ட பணிகளுக்காகவும் நான் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், நாங்கள் இந்த நகரத்தின் திறவுகோலை அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் சமூகத்தில் வழங்குகின்றோம். சாவியை கொடுக்கின்றோம்.

பின்னர், அவர் நகரத்தின் சாவியையும் கொடுத்தார்.

சீயோன் நகரத்தின் மேயர் எடுத்துரைத்த கருத்துகள் இவையாகும். அவர் கூறுகின்றார்: நான் இங்கு 1962-லிருந்து வசிக்கின்றேன். இந்த நிகழ்ச்சி சீயோன் நகரம் மற்றும் ஜமாஅத்திற்கு ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும்.

பின்னர் அவர் என்னை நோக்கி மிகவும் உணர்வுப்பூர்வமான முறையில் கூறினார்:

இன்று நீங்கள் என்னை speechless-ஆக ஆக்கிவிட்டீர்கள். (என்னை பேச முடியாமல் செய்துவிட்டீர்கள்) மேலும், கூறினார்: தாங்கள் எங்களுடன் இருக்கும் உணர்வு மிகவும் இனியதாகும்.

மெம்பர் ஆஃப் இல்லினாய்ஸ் (Illinois) ஜெனரல் அசம்பளி மதிப்பிற்குரிய ஜாய்ஸ் மேன்ஸன் அவர்கள் தமது உரையில் இவ்வாறு கூறினார்: இங்கு சீயோனில், வரலாற்று சிறப்பு மிக்க இந்த ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்ச்சியில் நான் பங்குபெறுவது எனக்கு மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும். சீயோன் நகரம் அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்திற்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரம் ஆகும். இன்று இந்த நகரத்திற்கு சிறப்பான நாளாகும். சீயோன் எப்படிப்பட்ட ஓர் இடமென்றால், அதன் அடித்தளத்தில் கடந்த நூற்றாண்டின் துவக்கத்தில் அலெக்ஸான்டர் டூயி என்பவர் அமைத்தார். அவர் இதனை ஒரு தத்துவார்த்த நகரமாக ஆக்க விரும்பியிருந்தார். அதன் வாசல்கள் அவரை ஏற்றுக் கொண்டவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் அனைவருக்கும் அடைக்கப்பட்டிருந்தன. ஆனால், இன்று சீயோன் நகரம் பல்வேறு மார்க்கத்தைச் சார்ந்த மக்களின் வீடாகும். மேலும், இந்த பள்ளிவாசல் காழ்ப்புணர்ச்சி கொண்டவர்களுக்கு எதிராக நம்பிக்கையாளர்களின் துஆக்களின் வெற்றியின் அடையாளமாகும்.

இந்த சிறப்பான வெற்றிக்காக நான் அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகத்திற்கு எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மற்றவர்களுக்கும் கூட அந்த போட்டியைக் குறித்து நன்றாக தெரிந்துவிட்டது.

அந்த பெண்மணி தொடர்ந்து கூறுகின்றார்: அமைதியை வளர்ப்பதன் அடிப்படையில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்கள் ஒரு சிறந்த முஸ்லிம் தலைவர் ஆவார்கள்.

அடுத்து அவர் கூறினார்: அமைதியை நிலைநாட்டுவதற்கு அன்னார் அழுத்தம் கொடுத்தவாறு உலகம் முழுவதும் உள்ள சட்டம் இயற்றுபவர்கள் மற்றும் ஏனைய தலைவர்களிடம் அன்னார் பேசினார்கள்.

தொடர்ந்து அவர் கூறுகின்றார்: அமைதியை விரும்புகின்ற மற்றும் மற்றவர்களுக்கு தொண்டாற்றக் கூடிய ஜமாஅத் இங்கு குடியேறி இருப்பதும், இங்கு பள்ளிவாசல் கட்டுவதற்கு முடிவு எடுத்திருப்பதும் சீயோன் நகரத்தின் நற்பேறாகும். எனது மனமார்ந்த விருப்பம் என்னவென்றால், இந்த பள்ளிவாசல் இந்த நகரத்திற்கு மட்டுமல்ல மாறாக, நாலாப்புறமும் நம்பிக்கையின் ஒளிக்கதிராக ஆகிவிட வேண்டும் என்பது எனது விருப்பமாகும்.

நான் இந்த சமூகத்திற்கு பள்ளிவாசல் திறப்பிற்கான வாழ்த்துகளை தெரிவித்தவாறு மன்றத்தில் ஒரு மசோதாவையும் முன் வைத்துக் கொண்டிருக்கின்றேன்.

அடுத்து, லேன்டோஸ் ஃபவுன்டேஷன்ஸ் ஃபார் ஹியூமன் ராயிட்ஸ் அன்ட் ஜஸ்டிஸ் அமைப்பின் தலைவரான டாக்டர் கேத்ரினாலேன்டோஸ் கூறுகின்றார்கள்; நான் ஜமாஅத் உறுப்பினர்களை சந்திக்கும்போதெல்லாம் எனது ஆன்மீகத்தில் முன்னேற்றம் ஏற்படுவதை நான் உணர்கின்றேன்.

தொடர்ந்து கூறுகின்றார்கள்: இங்கு சீயோன் நகரத்தில் நடைபெற்ற முபாஹலாவைக் குறித்து கேள்விப்பட்டு நான் மிகவும் ஆச்சரியம் அடைந்துள்ளேன். அதாவது, மொபைல்ஃபோன், கம்ப்யூட்டர் மற்றும் ஏனைய தொலை தொடர்பு சாதனங்கள் எதுவும் இல்லாத அந்தக் காலத்திலும் இவ்வளவு அதிகமாக அந்த போட்டியைக் குறித்து செய்தி பரவியிருப்பது எனக்கு ஆச்சரியம் தருகிறது.

ஜான் டூயினுடைய கொள்கை ஒன்றாக இருந்தது. அது வெறுப்பு, பரஸ்பர பிளவு மற்றும் காழ்ப்புணர்ச்சியை அடித்தளமாக கொண்டிருந்தது. மற்றொரு கொள்கை, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நிறுவனர் மிர்ஸா குலாம் அஹ்மதின் கொள்கையாக இருந்தது. அது பரஸ்பர மரியாதை, சகிப்புத்தன்மை ஆகியவற்றைக் கொண்டிருந்தது. மேலும், அந்த போட்டியின் முடிவை முற்றிலும் அல்லாஹ்வின் கரத்தில் ஒப்படைத்திருந்த ஒரு நபரின் சார்பாக நடைபெறும் போட்டியாக இருந்தது. அந்த முபாஹிலாவில் யாருக்கு

வெற்றி கிடைத்தது? என்பதன் முடிவை நாம் அறிவோம். நிச்சயமாக, அந்த பள்ளிவாசலின் திறப்பு தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் பெயர் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசல் என்று சூட்டப்பட்டுள்ளது. அதன் பொருள் என்னவென்றால், அந்த முபாஹலாவில் அஹ்மதிய்யா ஜமாஅத் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிறுவனரின் பங்கில் வந்த அந்த ஒரு மகத்தான வெற்றி என்பதாகும். அடுத்து அவர் கூறுகின்றார்:

ஆனால், எனது கருத்தின்படி நாம் இவ்வாறு கூறவேண்டும். அதாவது இது அஹ்திய்யா ஜமாஅத்திற்கு கிடைத்த வெற்றி மட்டும் அல்ல. மாறாக இது மனித குலத்திற்கு கிடைத்த வெற்றியாகவும் இருந்தது. ஏனெனில், அதனால் பரஸ்பர மரியாதை, அன்பு, சகிப்புத்தன்மைக்கு வெற்றி கிடைத்துள்ளது. அதன் முன்னுதாரணத்தை நாம் தற்போது இந்த மகத்தான ஜமாஅத்தில் பார்க்கின்றோம். தொடர்ந்து கூறுகின்றார்கள்: இன்று நாம் இங்கு இந்த அழகான மற்றும் அமைதி நிறைந்த சூழலில் அமர்ந்துள்ள அதேநேரம் பாகிஸ்தானில் அமர்ந்துள்ள அந்த அஹ்மதிகளையும் நினைவிற் கொள்ள வேண்டும். அவர்கள் தமது மார்க்கத்தின் காரணமாக தினமும் சொல்லொண்ணா அநீதிகளையும், வன்முறை மற்றும் வெறுப்புகளையும் சந்தித்து வருகின்றனர். அவர்கள் அராசங்கம் இருந்தபோதிலும் தங்களை தனித்தவர்களாக உணர்கின்றனர்.

அடுத்து, சீயோன் நகரத்து முன்னாள் கமிஷனர் அமோஸ் மோன்க் (Amos monk) சாஹிப் தமது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்தினார்கள். கூறுகின்றார்கள்: எனது கருத்தின்படி, உங்களது போதனைகள் எல்லா விஷயங்களையும் சூழ்ந்துள்ளன. மேலும், உலகம் இதை விட அதிகமாக அறிந்திருக்க வேண்டும். எனது கருத்தின்படி, இது இன்றைய உலகின் மிகவும் அழகான ரகசியம் ஆகும். எனது மேஜையில் உள்ள துண்டு பிரசுரத்தை என்னால் பார்க்க முடிந்தது. அதில் நீதி, தூய்மை மற்றும் அன்பிற்கான தூதுச் செய்தி உள்ளது. தற்போது உலகிற்கு இந்த விஷயங்களுக்கான தேவையே உள்ளது. வெறுப்புகளை ஒழித்துவிட்டால் உலகம் சொர்க்கத்தைப் போன்று ஆகிவிடும். எனது கருத்தின்படி, இந்த தூதுச் செய்தியை முழு உலகமும் கேட்க வேண்டும். உலகின் பிரச்சனைகளுக்கான ஒரே தீர்வு இதுவே ஆகும்.

அடுத்து, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைக் குறித்து ஒரு நூலை எழுதிய கிரேக் கான்ஸிடைன் (craig Considine) என்பவர் பேராசிரியர் ஆவார். அவர் மிகவும் உறுதியான கிறிஸ்த்தவர் ஆவார். அவர் கூறுகின்றார்: காலத்தின் கலீஃபா அவர்கள் என்னை பழைய நண்பர் போன்று சந்தித்தார்கள். நான் இந்த விஷயத்தால் மிகவும் உணர்ச்சிவயமாகிவிட்டேன். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன் மூலம் எனது அறிவு மிகவும் அதிகமாகியுள்ளது.

எனக்கு அந்த சொற்பொழிவின் கட்டுரை கிடைக்கும்போது நான் அதனை எனது புத்தகத்திலும் பயன்படுத்திக் கொள்வேன். பின்னர் கூறுகின்றார்: ஜமாஅத்தின் இமாம் அவர்கள் மிகவும் அழகான கோணத்தில், எளிய சொற்களில் இந்த கருத்தை எடுத்துரைத்து விட்டார்கள். அதனை பாமரனும் எளிதாக புரிந்து கொள்ள முடியும். தொடர்ந்து அவர் கூறுகின்றார்: ஜமாஅத்தின் இமாம் அவர்கள் அனைத்து மனித பண்புகளையும் மேற்கொள்வது, பரஸ்பர மரியாதை, சகிப்புத்தன்மை, சுய மரியாதை ஆகியவற்றை கருத்தில் கொள்வதற்கு கவனமூட்டியுள்ளார்கள். இது குறிப்பாக எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அடுத்து கூறுகின்றார்: நீங்கள் உள்ளபடியே எங்களையும், எங்கள் அனைவரையும் பரஸ்பர அன்பின் பக்கம் அழைக்கின்றீர்கள்.

அவர் அங்கு அமர்ந்து ஜுமுஆ குத்பாவும் கேட்டார். ஒரு மணிநேரம் முழுவதும் அமர்ந்திருந்தார். பின்னர், அதன் பிறகு அவர் கூறினார். என்னிடமும் கூறினார்: நான் இதுபோன்ற குத்பாவை முன்னர் ஒருபோதும் கேட்டதில்லை.

இல்லினாய்ஸ் (Ilinois) என்ற அமைப்புடன் தொடர்புடைய ஒரு விருந்தினரான மெலடி ஹால் (Melody Hall) என்ற பெண்மணி கூறுகின்றார்: நான் பிராடக்ட் டெவலப்மென்ட் மேனஜர் ஆவான். இந்த நிகழ்ச்சி மிகவும் மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியாக இருந்தது. நான் இதிலிருந்து மிகவும் இன்பமடைந்தேன்.

சமூகத்தில் பகைமையுணர்வு கொண்ட நபருக்கு எந்த இடமுமில்லை என்ற ஜமாஅத்தின் இமாம் அவர்களின் இந்த தூதுச் செய்தி மிகவும் அழகான தூதுச் செய்தியாக இருந்தது. தங்களை பார்ப்பதும், தங்களின் விஷயங்களை கேட்டபதும், ஒரு தனித்தன்மை வாய்ந்த மற்றும் நல்ல உணர்வு ஆகும். நான் மிகவும் இன்பமடைந்தேன். நம்மிடம் உள்ள ஆயுதம் துஆ எனும் ஆயுதமே ஆகும் என்ற இமாம் ஜமாஅத்தின் இந்த கூற்று எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

அடுத்து, ஜெஃப் ஃபென்டர் (Geff fender) என்ற விருந்தினர் கூறினார்: நான் சான்றிதழ் பெற்ற பொதுத்துறை கணக்கர் ஆவன். மேலும், ரியல் எஸ்டேட் தொழிலும் செய்து வருகின்றேன். இது எனக்கு முதல் அனுபவமாக இருந்து. மிகவும் தாக்கமடைந்துள்ளேன். இங்கு பள்ளிவாசல் திறப்பு விழா நிகழ்ச்சிக்கு வருவது எனது வாழ்க்கையில் ஒரு அரிதான சந்தர்ப்பம் ஆகும். பின்னர் சொற்பொழிவைக் குறித்து கூறினார்: நான் அதனால் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். மேலும் உங்களைக் குறித்து எனக்கு மிகவும் புதிய விஷயங்கள் கிடைத்துள்ளன. பின்னர் கூறினார்: முபாஹலா அழைப்பு எனக்கு ஒரு புதிய விஷயமாக இருந்தது. மேலும் நான் அதனைக் குறித்து இன்னும் அதிகமாக படிப்பேன்.

இவ்வாறு தப்லீக்கிற்கான வழிகளும் திறக்கின்றன.

ஓர் உயர்நிலைப் பள்ளி ஆசிரியரான மேட் ரென்டர் (Matt Render) என்பவரும் வருகை தந்திருந்தார், கூறுகின்றார்கள்: அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம் அவர்களின் தூதுச் செய்தியும், அன்னார் புரிய வைத்த கோணமும் மிகவும் நன்றாக இருந்தது. என்னைப் போன்ற இன்னும் ஏராளமான மக்கள் அதனை மிக எளிதாக புரிந்து கொண்டிருக்க முடிந்தது.

எமர்ஜென்சி சர்வீஸ் துறையுடன் தொடர்புடைய மேரி லூ ஹய்ல்பிரன்ட் அல்லது ஹல்பிரன்ட் (Mary Lou Hildebrand) என்ற விருந்தினரும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். அந்த பெண்மணி கூறுகின்றார்: நான் மிகுந்த தாக்கத்திற்குள்ளாகியுள்ளேன். தங்களின் தூதுச் செய்தியில் தூய்மை ஒளி வீசிக் கொண்டிருந்தது. எந்த பகட்டும் இருக்கவில்லை. எல்லா ரீதியிலும் உண்மையானதாகவும், தனித் தன்மை வாய்ந்ததாகவும் இருந்தது. இதிலிருந்து ஒவ்வொருவரும் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை அனுமானித்துக் கொள்ள முடியும்.

டாக்டர் ஜெஸி ராட்ரீக்ஸ் (Jesse Rodriguez) அவர்களும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார்கள். அன்னார் Benton பகுதிகளின் பள்ளிக்கூடங்களின் சூப்பிரன்டென்ட் ஆவார்கள். கூறுகின்றார்கள்: தங்களின் சொற்பொழிவின் மையப்புள்ளி பரஸ்பர ஒற்றுமை ஆகும். மிகவும் அருமையான தூதுச் செய்தியாகும். எல்லா மார்க்கங்களும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்றும், நாம் அனைவரும் ஒன்றுபட முடியும் என்றும் தாங்கள் கூறினீர்கள். மிகவும் நல்ல கூற்றாகும்.

பின்னர், உள்ளூர் உயர்நிலைப் பள்ளியின் முதல்வர் ஸேக் லிவ்விங்ஸ்டன் (Zach Livingstone) கூறுகின்றார்: இமாம் ஜமாஅத் அவர்களின் கூற்றுகள் தமக்குள் ஒரு சிறப்பான ஈர்ப்பு சக்தியை வைத்துள்ளன. குறிப்பாக, மனித உரிமைகள் மற்றும் மனிதத் தொண்டிற்காக செய்யப்படும் முயற்சிகள் மிகவும் தாக்கம் நிறைந்தவை ஆகும். எல்லாரிடத்திலும் அன்பு எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற தங்களின் குறிக்கோள் எல்லா சமுதாயங்களிலும், எல்லா மார்க்கங்களிலும் மற்றும் குறிப்பாக சீயோன் நகரம் முழுவதும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இந்த தூதுச் செய்தி மிகவும் அவசியமானதாகும்.

தொற்று நிலவரத்திற்குப் பிறகு நமது குடும்பங்கள் மற்றும் மாணவர்களுக்கு மத்தியில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த சிக்கல்களிலிருந்து நாம் வெளிவருவதற்கு இந்த தூதுச் செய்தியின் தீவிரமான அவசியம் உள்ளது.

மற்றொரு விருந்தினர் வந்தார். அவர் சீயோன் பள்ளிவாசல் அடிக்கல் நாட்டுவிழா சந்தர்ப்பத்தின்போது அவரும் செங்கல் வைத்திருந்தார். கூறுகின்றார்: இன்றைய

நாள் ஓர் அழகிய நாளாக இருந்தது. எனக்கு கடந்த வருடம் இந்த பள்ளிவாசலுக்கான அடிக்கல் வைக்கும் சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ளும் நற்பேறு கிடைத்திருந்தது. அது முழுமையடைந்து பார்ப்பதில் எனக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது. உங்களுடைய பள்ளிவாசல் எங்களது சமூகத்திற்கு நம்பிக்கை மற்றும் நட்பிற்கான ஊடகமாகும்.

சீயோனின் காவல்துறைத் தலைவர் யெரிக் (Eric) சாஹிப் கூறுகின்றார்: மிகவும் நல்ல பணி நடந்துள்ளது. எல்லா மக்களிடமும் அன்பையும், தூய்மையையும் பார்ப்பதற்கு மிகவும் நன்றாக உள்ளது. நீங்கள் யார்? என்பதில் எந்த வேறுபாடும் இல்லை என்ற இந்த தூதுச் செய்தி முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதாவது, ஒருவர் மற்றவரைக் கருத்தில் கொள்ளக்கூடியதாகும். எவ்வளவு சிறந்த, அழகான தூதுச் செய்தியாகும் அது!

ஒரு விருந்தினரான ஜெனீஃபர் (Jennifer) என்ற பெண்மணி கூறுகின்றார்: உங்களுடைய ஜமாஅத்தின் விதிமுறைகளின் விஷயத்தைக் குறித்து பேசினால் அது எல்லாவற்றையும் விட மிக உயர்ந்ததாகும். நீங்கள் சீயோன் நகரத்தில் கால் வைக்கும்போது, பழைய கட்டடத்தில், எல்லாரிடத்திலும் அன்பு: எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற ஒரு motto ஒரு தூதுச் செய்தி காணக் கிடைக்கின்றது. அது உங்களுடன் எதிரொலித்துக் கொண்டு இருக்கின்றது. அதன் சப்தம் உங்களுடன் இருக்கின்றது. இதுவே சீயோன் நகரத்தின் அசல் ஆன்மா ஆகும்.

அடுத்து, சீயோன் டவுன்ஷிப்பின் கண்காணிப்பாளரான சேரி நீல் (cheri Neal) என்ற விருந்தினர் கூறுகின்றார்: நிர்வாக ஏற்பாடுகளைப் பார்த்து நான் மிகவும் ஆச்சரியமடைந்துள்ளேன். நீங்கள் உங்களுடைய இந்த நோக்கத்தில் வெற்றியடைந்திருப்பதால் நான் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

அடுத்து ஒரு விருந்தினர் கூறினார்: லட்சக்கணக்கான மக்களை வழிநடத்தக்கூடிய மற்றும் மக்களை இணைக்கக்கூடிய தங்களைப் போன்ற தலைவர் எங்களுக்கு மத்தியில் இருக்கின்றார் என்பதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. மேலும், அவர் அனைவரும் ஒன்றே.மேலும் ஒவ்வொரு மார்க்கத்திற்கும் முக்கியத்துவம் உள்ளது என்ற தலைப்பில் அவர் பேசுகின்றார். இந்த தூதுச் செய்தி மிகவும் நல்லதாகவும், தாக்கம் நிறைந்ததாகவும் இருக்கின்றது.

அடுத்து, குலோரியா (Gloria) என்ற பெண் விருந்தினர் கூறுகின்றார்: சீயோன் நகர வரலாறு மிகவும் அரியதாக இருந்தது. நான் இங்கேதான் வசிக்கின்றேன் என்றாலும், இந்த இடத்தைக் குறித்த நிறைய விஷயங்களை நான் அறிந்திருக்கவில்லை. அடுத்து, ஒரு விருந்தினர் கூறினார்: நான் இந்த நிகழ்ச்சியிலிருந்து முழுமையாக இன்பமுற்றேன். இந்த தூதுச் செய்தி என் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எல்லாரிடத்திலும் அன்பு எவரிடத்திலும் இல்லை வெறுப்பு என்ற தங்களின் motto-வைக் குறித்து நான் அறிந்திருந்தேன். ஆனால், உங்களைப் பார்த்த பிறகு, எனக்கு அதில் மேலும் நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

ஏராளமான விஷயங்கள் என்னை மிகுந்த தாக்கத்திற்குள்ளாக்கிவிட்டது. தொடர்ந்து அவர் கூறினார்: திருக்குர்ஆன் என்ற ஒரு வேதமே அனைத்து மார்க்கத்தையும் பாதுகாக்கின்றது என்று இமாம் ஜமாஅத் கூறியுள்ளார்கள். இது எனக்கு புதிய விஷயத்தை கற்றுக் கொண்டுள்ளேன். இதற்கு முன்னர் நான் இதனை அறிந்திருக்கவில்லை.

அடுத்து ஷோபனா சங்கர் என்ற இந்திய பேராசிரியை வந்திருந்தார். என்னை அவர் சந்தித்திருந்தார். அவர் ஸேடேட் யூனிவர்சிட்டி ஆஃப் நியூயார்க்கின் பேராசிரியை ஆவார். இத்தாலியின் அப்துஸ்ஸலாம் ரிசர்ச் சென்டரிலிருந்து அவர் ரிசர்ச்சும் செய்துள்ளார். சில காலம் கானாவிலும் இருந்துள்ளார். அவர் இவ்வாறு கூறினார்:

தாங்கள் கானாவில் இருந்தீர்கள். தங்களின் பணி உயிர்ப்புடன் உள்ளது.

இவ்வாறு அவர் உரையாடும்போது ஓரிடத்தில் கூறினார்.

பேராசிரியை இவ்வாறு கூறினார்: ஆஃப்ரிக்காவில் அஹ்மதிய்யா கேர்ல்ஸ் ஸ்கூலிலிருந்து கல்வி பயின்ற பல பேராசிரியைகளுடன் நான் உரையாடியுள்ளேன். அது பெண் பிள்ளைகளுக்கான சிறந்த பள்ளிக் கூடம் ஆகும்.

இவர் ஆஃப்ரிக்காவில் ஜமாஅத்தின் கல்வித் தொண்டுகளையும், வரலாற்றையும் பரப்ப விரும்புகின்றார். மேலும், மேற்கு ஆஃப்ரிக்க அஹ்மதிகளைப் பற்றி ஒரு புத்தகம் எழுத விரும்புகின்றார்.

உள்ளூர் மொழி மற்றும் மொழியாக்கம் செய்பவர்களிடமிருந்து நான் பயனடைவதற்கு ஜமாஅத்தின் உதவி வேண்டும் என்று அந்த பேராசிரியை கூறினார். எவ்வாறு இருப்பினும், எங்கெல்லாம் உங்களுக்கு உதவி தேவைப்படுமோ இன்ஷாஅல்லாஹ் நாங்கள் உதவி செய்வோம் என்று நான் அவரிடம் கூறியுள்ளேன். மேலும், கானா மட்டுமின்றி மற்ற நாடுகளையும் நீங்கள் இணைத்துக் கொள்ள வேண்டும் என்று நான் அவரிடம் கூறினேன்.

அடுத்து டேலஸில் பைத்துல் இக்ராம் மஸ்ஜித் திறப்பு விழா நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியிலும், முஸ்லிம் அல்லாத மற்றும் ஜமாஅத்தைச் சாராத 140 நபர்கள் கலந்து கொண்டனர். அவர்களில் அரசியல் வாதிகள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், வழக்குரைஞர்கள், பொறியாளர்கள், பாதுகாப்புத் துறைகளின் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த விருந்தினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஆலன் (Allen) நகர கவுன்சிலின் உறுப்பினர் கார்ல் கிலிமன்ஸிக் (Carl Clemencich) என்பவர் தான் நகரத்தின் சாவியையும் வழங்கியிருந்தார். அவர் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியவாறு கூறினார்: இன்று பைத்துல் இக்ராம் பள்ளிவாசல் திறப்பு விழா எனும் வரலாற்று நிகழ்ச்சியில் கலந்து கொள்வது மிகுந்த கண்ணியத்திற்குரிய விஷயம் ஆகும். நான் மேயர் மற்றும் ஆலன் (Allen) நகரத்தின் அனைத்து சிட்டி கவுன்சில் சார்பாகவும் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு இந்த சிறப்பான வெற்றிக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேயர் இரண்டு நாட்களுக்கு முன் என்னை வந்து சந்தித்துவிட்டு சென்றார். பள்ளிவாசலுக்கு வந்தார். மேலும் சந்தித்தார். நான் வெளிநாடு செல்கிறேன். எனவே என்னால் வர இயலாது. மேலும், நான் எனது பிரதிநிதியை அனுப்புவேன் என்று கூறி வருத்தம் தெரிவித்தார். அந்த மேயர் அவர்களும் நல்ல நேசமிக்க மனிதராக இருந்தார்.

பின்னர் மேயரின் பிரதிநிதி கூறுகின்றார்: ஏழைகளுக்கு உணவளித்தல், தேவையுடையவர்களுக்காக ஆடைகளை ஒன்றுசேர்த்தல், ஏனைய சந்தர்ப்பங்களில் அந்த பகுதியின் தேவையுடைய குடிமக்களுக்கு ஏராளமான உதவி செய்தல் போன்ற பணிகளை உள்ளடக்கிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தொண்டுகளை நாங்கள் பாராட்டுகின்றோம். அடுத்து கூறுகின்றார்: ஒரு அமைதியை விரும்பக்கூடிய மற்றும் மனித குலத்திற்கு தொண்டாற்றும் உணர்வு கொண்ட சமூகம் இந்த நகரத்தை தமதாக்கிக் கொண்டிருப்பதும், இங்கு அழகான பள்ளிவாசலை கட்டியிருப்பதும் இந்த ஆலன் நகரத்தின் நற்பேறு ஆகும்.

எனது விருப்பம் என்னவென்றால், இந்த பள்ளிவாசல் இந்த நகரத்திற்கு மட்டுமல்லாது இந்த அனைத்து பகுதிகளுக்கும் ஒரு நம்பிக்கையின் ஒளிக்கதிராக இருக்க வேண்டும். ஆலன் (Allen) என்ற இந்த நகரமானது டேலஸ் (Dallas) நகரத்துடன் முற்றிலும் இணைந்துள்ள நகரம் ஆகும். தற்போது ஏறக்குறைய அதன் அங்கமாகவே ஆகிவிட்டது. இறுதியில், அவர் மேயர் மற்றும் ஆலன் (Allen)- நகர கவுன்சில் சார்பாக நகரத்தின் சாவியையும் வழங்கினார்.

பேராசிரியர் டாக்டர் ராபர்ட் ஹன்ட் (DR Robert Hunt) என்ற விருந்தினரும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார். அவர் Perkins,Southern Methodist University School of Theology- இல் Global Theological துறையில் டைரக்டராக உள்ளார். கூறுகின்றார்: நான் ஜமாஅத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் Methodist University-யிலிருந்து என்னையும், எனது தோழர்களையும் இன்று இந்த வரலாற்று நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கு அழைத்துள்ளீர்கள். இது எங்களுக்கு மிகவும் பெருமிதத்திற்குரிய விஷயம் ஆகும். அடுத்து கூறுகின்றார்: ஜமாத்தின் தலைவர், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாம், இரண்டு சிறப்புகளை

வளர்ப்பதற்காக தம்மை அர்ப்பணித்துள்ளார்கள். அதில் முதலாவது மார்க்க சுதந்திரம் மற்றொன்று மார்க்கங்களுக்கிடையிலான பேச்சுவார்த்தை ஆகும்.

இந்த இரண்டு சிறப்புகளுக்குமிடையில் ஆழமான தொடர்பு உள்ளது. பரஸ்பர புரிந்துணர்வு இல்லையென்றால், பரஸ்பர மரியாதை இல்லையென்றால் பின்னர் பிரிவினையின் குரலுக்கு வலிமை கிடைக்கின்றது. நான் இந்த விஷயத்தை இந்த அடிப்படையில் கூறுகின்றேன். அதாவது, எனது பருவமடைந்த பாதி வாழ்க்கை எப்படிபட்ட நாடுகளில் கழிந்துள்ளதென்றால், அங்கு நான் சுயமே மார்க்க சிறுபான்மையினரைச் சார்ந்தவனாக இருந்தேன். பின்னர் கூறினார்: அதாவது, அஹ்மதிய்யா ஜமாஅத் அநீதிக்கு இலக்காக்கப்பட்டது என்பதற்கு வரலாறு சாட்சியாக உள்ளது. இதன் காரணமாகவே அஹ்மதிய்யா ஜமாஅத் மார்க்க சுதந்திரத்திற்கான முயற்சிகளில் முதல் வரிசையில் இருந்துள்ளது. விஷயம் இதுவே ஆகும். அதாவது நாம் ஒருவர் மற்றவருடன் பரஸ்பர மரியாதையுடனும், திறந்த மனதுடனும் நடந்து கொள்ளாத வரை நம்மால் பிரிவினைவாதத்தை கட்டுப்படுத்த முடியாது. மேலும் எதிர்மறை சிந்தனை கொண்டவர்களை சமூகத்திலிருந்து ஒழிக்க முடியாது.

அடுத்து, ரிபப்ளிக்கன் (Republican) காங்கிரஸ்மேன் ஆனரபில் மைக்கேல் கால் (Michael McCaul) தமது எண்ணங்களை இவ்வாறு வெளிப்படுத்தினார். கூறுகின்றார்: உலகின் மூன்று மார்க்கங்களான யூதம், கிறிஸ்தவம் மற்றும் இஸ்லாம் தமது வரலாற்றை ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடன் இணைக்கின்றன.

பின்னர் அவர் என்னிடம் இவ்வாறு கூறினார்: ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுடன் தொடர்பு கொண்டுள்ளஇந்த மூன்று மார்க்கங்களும் அமைதியுடன் இருக்க முடியும் என்பது தங்களின் கருத்து ஆகும். இந்த விஷயத்திற்கான அனுபவம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தைத் தவிர வேறு யாருக்கு இருக்க முடியும்? பின்னர் கூறினார்: ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைக் குறித்தும், புதிய ஏற்பாடு மற்றும் இன்ஜில் தொடர்பான அஹ்மதிய்யா ஜமாஅத்தின் போதனைகளைக் குறித்தும் இமாம் ஜமாஅத்துடன் பேசுவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அன்னாருடன் பேச்சுகள் நடந்து வந்தன. மேலும், இந்தியாவில் இயேசு என்ற நூலும் அன்னாரிடம் இருந்தது. கூறுகின்றார்: நான் பாதி படித்துவிட்டேன். மேலும், படித்து வருகின்றேன். மிகவும் சுவாரஸ்மாக உள்ளது. மேலும், ரிசர்ச் செய்வேன்.

கூறுகின்றார்: இந்த நூலிலிருந்து ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைக் குறித்து ஏராளமான புதிய விஷயங்கள் எனக்கு தெரிய வந்துள்ளன.

அவர் நல்ல கற்றறிந்த மனிதர் ஆவார். மேலும் அவர் ஆர்வமுடையவராகவும் இருக்கின்றார்.

எவ்வாறு இருப்பினும், அவர் கூறுகின்றார்: புதிய ஏற்பாடு மற்றும் இன்ஜீலைக் குறித்து பேசுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. நாம் அஹ்மதிய்யா ஜமாஅத்திடமிருந்து அமைதி, கருணை மனம் மற்றும் அன்பைக் குறித்து நிறைய கற்றுக் கொள்ள முடியும் என்பதில் எந்த ஐயமுமில்லை. கேத்தோலிக் குடும்பத்தில் நான் வளர்ந்தேன். தற்போது நான் அமெரிக்க காங்கிரஸ்மேனில் அஹ்மதிய்யா காகஸ் (Ahmadiyya Caucus) உடைய சேர்மன் ஆவேன்.

நமது ஜமாஅத்திற்கு ஆதரவாக பேசக்கூடிய மற்றும் குரல் எழுப்பக் கூடிய மக்கள் உள்ளனர். இவர் அந்த சங்கத்தின் சேர்மனாக இருக்கின்றார். பின்னர் கூறுகின்றார்: குறிப்பாக, உலகில் அமைதியை பரப்புவதற்கும், சமுதாயங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும், தீவிரவாதத்தை ஒழிப்பதற்கும், வறுமையை ஒழிப்பதற்கும், பொருளாதார சமத்துவத்திற்கும், உலகளாவிய மனித உரிமைகளுக்காகவும், உலகளாவிய மார்க்க சுதந்திரத்திற்காகவும், தாங்கள் செய்து வரும் முயற்சிகளை நான் பாராட்டுகின்றேன்.

பின்னர் கூறுகின்றார்: பல அஹ்மதிகள் குறிவைத்து கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்த அநீதியும், அக்கிரமும் தொடர் கதையாக இருந்தபோதிலும் இமாம் ஜமாஅத் அவர்கள் பிறரை பழிவாங்குவதிலிருந்து தடுத்துள்ளார்கள். அது ஒரு மாபெரும் செயல் ஆகும்.

அடுத்து கூறுகின்றார்: உண்மையான மற்றும் நிரந்தரமான அமைதிக்கு நீதி மிகவும் அவசியமாகும் என்று இமாம் ஜமாஅத் அவர்கள் மீண்டும், மீண்டும் உலகத் தலைவர்களுக்கு புரிய வைத்துள்ளார்கள். மேலும், அநீதியிழைக்கப்பட்ட சமுதாயங்களின் உரிமைக்காக குரல் எழுப்பியுள்ளார்கள்.

இதுபோன்ற எண்ணங்களை அவர் வெளிப்படுத்தியுள்ளார். மிகவும் விளக்கமாக கருத்து தெரிவித்துள்ளார்.

டாம் பெர்ரி (Tom Berry) என்ற ஒரு விருந்தினர் கூறுகின்றார்: நான் ஜமாஅத்தின் இமாம் அவர்களுக்கு நன்றி கூற விரும்புகின்றேன். அன்னாரின் தூதுச் செய்தி, விருந்து உபசரிப்பு, பரஸ்பர சந்திப்பு, என அனைத்தும் மிக சிறப்பாகும். கொள்கை அல்லது மார்க்கத்திற்கு அப்பாற்பட்டு ஒருவர் மற்றவரின் நன்மைக்காக அதிகஅதிகமாக பணி செய்வது சந்தேகத்திற்கு இடமின்றி ஓர் அருட்கொடை ஆகும். வாழ்க்கைக்கு மதிப்பளிக்க வேண்டும். வாழ்க்கை மீது அன்பு இருக்க வேண்டும். மனித குலத்தை மதித்து நடக்க வேண்டும். இது எதனை வெளிப்படுத்துகிறது என்றால், இதுபோன்ற சமூகத்தில் ஒரு தனிநபர் அல்லது அமைப்பின் மீது மட்டும் பொறுப்பல்ல. மாறாக, அனைவரும் இணைந்து பணி செய்ய வேண்டும். இதுவே கலீஃபாவின் தூதுச் செய்தியாகும். இது எப்படிபட்ட தூதுச் செய்தி என்றால், ஒவ்வொரு நாளும் உறங்குவதற்கு முன்பும், காலையில் எழுந்த பிறகும் படிக்க வேண்டும். இந்த தூதுச் செய்தியை நாம் நமது பிள்ளைகளுக்கு புரிய வைக்க வேண்டும். அப்போதுதான், நாம் மறைந்த பிறகு அவர்கள் இந்த தூதுச் செய்தியை நிலை நிறுத்துவார்கள். நான் தங்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து, சுல்தான் சவுத்ரி என்ற ஒரு முஸ்லிம் விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: இமாம் ஜமாஅத் அவர்கள் உலகத்திற்கு அமைதியின் தூதுச் செய்தியை வழங்கியுள்ளார்கள். இது எனது கருத்தின்படி, ஒரு சிறந்த தூதுச் செய்தி ஆகும். முஸ்லிம்கள் இங்கு கைப்பற்றிவிடுவார்கள் என்ற அவர்களுக்கெதிரான இந்த அச்சத்தை அகற்றுவது மிக அவசியமாகும் என்று நான் கருதுகிறேன். முஸ்லிம்களை அழிப்பதற்காக எவரும் சதி செய்யவில்லை. எவரும் எந்த முயற்சியும் செய்யவில்லை. எனவே எந்த ஒரு போருக்கான திட்டம் தீட்டுவதற்கு முஸ்லிம்களுக்கும் உரிமையில்லை என்பதை அவர் தெளிவுபடுத்திவிட்டார்கள்.

North Presbyterian church-லலிருந்து பேவ்ரி மைக்கார்ட் (Beverly McCord) சாஹிபா என்ற ஒரு பெண் விருந்தினர் வருகை தந்திருந்தார். அவர் கூறுகின்றார்: காலத்தின் கலீஃபாவைப் பார்த்து, அன்னாரின் கூற்றை செவிமடுத்து மிகவும் மனநிறைவு ஏற்பட்டது. உலக அமைதிக்காக இவ்வாறு முயற்சி செய்யக்கூடிய வேறு எவரையும் நான் கண்டதில்லை. மிக அருமையான உணர்வு ஆகும். மக்கள் தமது சுயநலன், ஒரு அண்டை வீட்டுக்காரர் மீது ஆதிக்கம் செலுத்துவது அல்லது வேறு ஒருவரின் பகுதியை கைப்பற்றுவதற்கு அல்லது ஒருவர் மீது அநீதியிழைக்கும் திட்டத்திற்கு பகரமாக இந்த தூதுச் செய்தியை செவிமடுத்தால்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

பின்னர் உலகில் அமைதி நிலைபெற முடியும். அந்தோ! நாம் அமைதியை வளர்க்கக்கூடிய மேலும் அதிகமான சொற்பொழிவைக் கேட்க வேண்டுமே! அவர்கள் எப்போதும் அமைதியை பேண வேண்டும். மேலும், பணி செய்ய வேண்டும் என்பதன் பக்கம் மக்களுக்கு கவனமூட்ட வேண்டும்.

கோலின் (Colin) கவுன்டி போலீஸ் துறையிலிருந்தும் லீராய் (LeRoy) என்ற ஒரு நபர் கலந்து கொண்டிருந்தார். கூறுகின்றார்: இது மிகவும் அழகான நிகழ்ச்சியாகும். அதிலிருந்து நான் நிறைய விஷயங்களைக் கற்றுக் கொண்டேன். அஹ்மதிய்யா முஸ்லிம் சமூகம் உண்மையிலேயே மிக சிறப்பான பணி செய்துள்ளது.

அடுத்து டாக்டர் ஹகீமுர் ரஹ்மான் சாஹிப் என்ற முஸ்லிம் விருந்தினரும் வருகை தந்திருந்தார். கூறுகின்றார்: இது முற்றிலும் நம்ப முடியாத ஒன்றாக இருந்தது. நிகழ்ச்சி, ஏற்பாடுகள், விருந்து உபசரிப்பு, கூடாரம், போன்றவை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. கூறுகின்றார்: இந்த மக்கள் எனக்கு வழங்கிய கண்ணியத்திற்கு நான் தகுதிவாய்ந்தவன் அல்ல. இந்த அனைத்து சூழலை பார்த்து, நீங்கள் வழங்கிய கண்ணியத்தை பார்த்து எனது கண்கள் கலங்குகின்றன. மிகச் சிறந்த மனிதர்களுக்கு மத்தியில் நேரத்தை கழிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இஸ்லாத்தின் உண்மையான போதனைகளுக்கு ஏற்ப செயல்படுபவரே உண்மையான மனிதர் ஆவார். இங்கு அமர்ந்து கொண்டு இந்த தூதுச் செய்தியை கொடுக்கின்றனர். பாகிஸ்தான் சென்றால் மவ்லவிகள் வாழவிட மாட்டார்கள்.

அடுத்து, அபே கிர்கன்டல் (Abby Kirkendall) என்ற பெண் விருந்தினர் கூறுகின்றார்: நான் எப்படிபட்ட மார்க்க அமைப்பை பார்த்தேன் என்றால் அவர்களின் இறை வணக்க வழிமுறைகள் நிச்சயம் நம்மிடமிருந்து வேறுபட்டதாகும். ஆனால், நம்முடைய (அக்தார்) மதிப்பீடு ஒன்றுபோல் உள்ளது. எனக்கு இது ஒரு சிறந்த அனுபவமாக இருந்தது. இது எனக்கு பெருமிதத்திற்குரியதாக இருந்தது. எல்லா சமூகத்தையும் உள்ளடக்கியுள்ள கருத்துகளைக் குறித்து மார்க்கத் தலைவரான இமாம் ஜமாஅத் அவர்கள் உரையாற்றியதை நான் கண்டேன்.

பின்னர் கூறுகின்றார்: இறைவன் இருக்கின்றான் என்ற உணர்வு இங்கு வந்த பிறகு எனக்கு ஏற்பட்டது. கொள்கைக்கு அப்பாற்பட்டு எங்கு இறையிருப்பிற்கான உணர்வு உங்களுக்கு ஏற்படுமோ அங்கு உங்களுக்கு அமைதியும், நிம்மதியும் கிடைக்கின்றது. அது இன்று இங்கு, மார்க்கம், இனம், சமுதாயம் என அனைத்திற்கும் அப்பாற்பட்டு (கலந்து கொண்டிருந்த) அனைத்து நபர்களுக்கும் கிடைத்தது. இந்த விஷயமே இன்று அனைத்து சமுதாயங்களுக்கும் தேவைப்படுகிறது.

அடுத்து, விக்டோரியா சாஹிபா என்ற ஒரு பெண்மணி கூறுகின்றார்: மார்க்க வேறுபாடுகள் மற்றும் பல்வேறு கருத்துகளுக்கு மத்தியிலும் நாம் நமக்குள் பரஸ்பரம் ஒருவர் மற்றவருடன் எவ்வாறு இணைந்திருக்க முடியும்? என்ற இமாம் ஜமாஅத் அவர்களின் சொற்பொழிவு இன்று எனக்கு மிகவும் சிறப்பானதாக இருந்தது.

எனது கருத்தின்படி, இது எப்படிபட்ட விஷயம் என்றால் இன்று மார்க்கங்களுக்கிடையிலான உரையாடல்களில் இந்தக் குறை தென்படுகிறது. நமது மார்க்க கொள்கைகளில் கருத்துவேறுபாடுகள் இருக்கும் நிலையிலும் முழு மனித குலமும் எவ்வாறு ஒருவர் மற்றவருடன் இணைந்திருக்க முடியும்? நாம் எவ்வாறு அமைதியுடன் ஒருவர் மற்றவரின் தேவையை உணர்ந்தவாறு வசிக்க வேண்டும்? என்பதைக் குறித்து இவ்வளவு நுட்பத்துடனும், ஞானத்துடனும் ஒருவர் உரை நிகழ்த்துவதைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளேன்.

அடுத்து, மேரி மேக்டர்மோட் (Mary McDermott) என்ற ஒரு பெண் விருந்தினர் வந்திருந்தார். இவர் டேலஸ் மஸ்ஜிதின் நமது அண்டை வீட்டுக்காரர் ஆவார். அவருக்கு மிகவும் அதிகமான நிலம் உள்ளது. பார்க்கிங்கிற்காக அவர் நமக்கு இடமும் தந்திருந்தார். அவர் கூறுகின்றார்: நான் இன்று இந்த நிகழ்ச்சிக்காக இடத்தை வழங்கியதால் எந்த அளவிற்கு மகிழ்ச்சியடைந்துள்ளேனோ அதுபோன்று இதற்கு முன்னர் ஒருபோதும் நான் மகிழ்ச்சியடைந்ததில்லை.

மிகவும் கண்ணியமிக்க. உயர் நல்லொழுக்கங்களைக் கொண்ட பெண்மணியாக அவர் இருந்தார். தமது இடத்தை கொடுத்துவிட்டார். ஆயினும், சுத்தம் செய்து, சீர் செய்து, சமமப்படுத்திக் கொடுத்தார்.

அடுத்து, பேவ்ரிலி மேக்கோர்ட் (Beverly McCord) என்ற பெண் விருந்தினர். இவரைக் குறித்து நான் முன்னரும் குறிப்பிட்டுவிட்டேன். அவர் கூறுகின்றார்: எப்போதும் உலகத் தலைவர்களின் கூற்றுகளை செவிமடுப்பது எனக்கு மிகவும் பிடித்தமானது. அவர்கள் தொடர்ந்து அமைதியின் தேவை, பரஸ்பர கருத்து வேறுபாடுகளை நீக்குவது மற்றும் அன்பின் பக்கம் அழைத்துக் கொண்டிருக்கும் தலைவர்களின் பேச்சைக் கேட்பது எனக்கு மிகவும் பிடிக்கும். அதுபோன்ற தூதுச் செய்தியைக் கேட்பது எனக்கு எப்போதும் மகிழ்ச்சியை தருகின்றது. எனக்கு தனிப்பட்ட முறையில் இந்த ஜமாஅத்தின் மீது எந்த அச்சமும் இல்லை. மற்றவர்கள் அச்சப்படுவதற்கும் எந்த காரணமும் எனக்கு புரியவில்லை. ஏனெனில், இந்த ஜமாஅத் மிகவும் அன்பு கொள்ளக்கூடிய, உணர்வு கொள்ளக்கூடிய மேலும் எப்போதும் படைப்பின சேவையாற்றக்கூடிய ஜமாஅத் ஆகும். ஏதாவது ஒரு அச்சம் இருந்தாலும் கூட இந்த ஜமாஅத்தின் படைப்பின சேவை மற்றும் வளர்ச்சிப் பணிகளைக் கண்டு உடனடியாக அது விலகிவிடுகின்றது.

பின்னர், ஜோஷுவா (Joshua) என்ற ஒரு விருந்தினர் வந்திருந்தார். அவர் கூறுகின்றார்: இன்றைய இந்த திறப்புவிழா நிகழ்ச்சியில் நானும், ஏனைய சீனியர் பாதிரிமார்களும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வேண்டுமென அழைக்கப்பட்டுள்ளோம். மக்களுடன் பேசுவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தது. இங்கு நுட்பமான ஞானத்துடன் அமைதி, ஒற்றுமை, நீதி ஆகிய விஷயங்கள் எவ்வாறு பேசப்பட்டனவோ அவற்றை நான் மிகவும பாராட்டுகின்றேன்.

பல்வேறு மார்க்கங்கள் மற்றும் நாகரீகங்களைச் சார்ந்த மக்களாக இருக்கின்றனர். ஆயினும் இவர்கள் நமது வாழ்க்கையில் இறையிருப்பு மற்றும் மனிதர்களுக்கிடையிலான பரஸ்பர அனுதாபம் ஆகியவற்றை பரப்புகின்றனர். இப்படிபட்ட மக்களும் இருக்கின்றனரே! என்ற உணர்வும் எனக்கு ஏற்பட்டது. ஏனென்றால், நமது செயல்களின் தாக்கம் மற்றவர்கள் மீதும் ஏற்படுகின்றது. எனவே இவ்வாறு ஒன்றாக அமர்வதும், உணவு உண்பதும், பேசுவதும் அவசியமாகின்றது. கூறுகின்றார்: இங்கு விருந்து உபசரிப்பு மிகவும் சிறப்பாக இருந்தது என்று எனது மனைவி கூறிக்கொண்டிருந்தார். இங்கு வந்தடைந்ததும் எல்லா விஷயங்களும் முறைபடுத்தப்பட்டதாக தோன்றியது.

இதேபோன்று அங்கு ஃபோர்ட் வொர்த் (Fort Worth) என்று ஓர் இடமுள்ளது. டேலஸிலிருந்து ஐம்பது, ஐம்பத்தைந்து மைல் தொலைவில் உள்ளது. அங்கும் சென்றிருந்தோம்.

ஒரு சிறிய பள்ளிவாசல், புதிய இடம் வாங்கப்பட்டுள்ளது. அந்த இடம் மூன்றரை ஏக்கர் பரப்பளவு கொண்டது ஆகும். ஆனால், அதில் மஸ்ஜித் இல்லை. மாறாக, கட்டடம் வாங்கப்பட்டுள்ளது. இந்த இடம் நான்கே முக்கால் ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். மூன்றரை ஏக்கர் கிடையாது. பதிமூன்றாயிரம் முரப்பா அடி அளவு கொண்ட ஒரு கட்டடம் இங்கும் உள்ளது. மல்டிபர்பஸ் ஹால் உள்ளது. அலுவலகங்கள் உள்ளன. நூலகங்கள் உள்ளன. எவ்வாறு இருப்பினும், இங்கு பள்ளிவாசலுக்கான வடிவம் கொடுப்பதற்கு ஏதுவாக

ஒரு கலசமும், மினாராவும் கட்டுவதற்கு திட்டம் உள்ளது. இது நல்ல இடமாகும். அங்கு ஜமாஅத் உறுப்பினர்கள் தொழுகைகளையும் நிறைவேற்றி வருகின்றனர். நல்ல இடமாகும். அங்கு மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை தொழ வைப்பதற்கு எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

ஒரு பெண் விருந்தினரான அபே கிர்கன்டல் (Abby kirkendall) சாஹிபா வருகை தந்திருந்தார். அவரைக் குறித்து முன்னரே கூறப்பட்டுவிட்டது. அவர் ஃபோர்ட் வொர்த்தில் வசிக்கின்றார். அவர் டாலஸ் பள்ளிவாசல் திறப்பு விழாவிற்கும் வந்திருந்தார். கூறுகின்றார்: இமாம் ஜமாஅத் அவர்கள் இறைவிருப்பத்திற்கேற்ப ஒருவர் மற்றவருடன் இணைந்து பணியாற்றுவதற்கான தூதுச் செய்தியை மிகவும் அழகான முறையில் வழங்கியுள்ளார்கள். அமைதிக்கான தூதுச் செய்தியும், அணு ஆயுதப் போரிலிருந்து

தற்காத்துக் கொள்வதற்கான தூதுச் செய்தியும் மிகவும் முக்கியத்துவம் கொண்டுள்ளது.

**எவரெல்லாம் இந்தப் போரில் பங்கேற்பாரோ அவரெல்லாம் அழிவில் சென்று வீழுந்துவிடுவார் என்ற அன்னாரின் தூதுச் செய்தி மிகவும் முக்கியமானதாகும்.**

அடுத்து, ஃபோர்ட் வொர்த்திலிருந்து First United Methodist Church-உடைய ஓர் உறுப்பினர் ஆவார். இவரும் அங்கு டலாஸிலிருந்து வந்திருந்தார். அந்த பெண்மணி கூறுகின்றார்: மிக அருமையான தூதுச் செய்தி. ஒவ்வொருவரும் கலீஃபாவின் இந்த தெளிவான தூதுச் செய்தியை கண்டிப்பாக கேட்க வேண்டும். கலீஃபாவின் சொற்பொழிவின் விதமும் மிகவும் அருமையாக இருந்தது. சொற்பொழிவை செவியுற்று ஓர் இன்பத்தை உணர முடிந்தது. நான் அதனை மீண்டும் கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, ஹைஸ்கூல் மினிஸ்ட்ரியின் ஓர் ஆசிரியை உள்ளார். கூறுகின்றார்: கலீஃபாவின் இரண்டு விஷயங்கள் என் மீது சிறப்பான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒன்று இதுவாகும். அதாவது சமூகத்தில் இஸ்லாம் தொடர்பாக உள்ளபடியே சந்தேகங்கள் நிலவுகின்றன என்ற விஷயத்தை அன்னார் ஒப்புக் கொண்டார்கள். மேலும் ஆசிரியையாக இருப்பதன் காரணத்தால் நான் இந்த விஷயத்தை என் மாணவர்களிடத்தில் அன்றாடம் பார்த்து வருகின்றேன். நான் மிகவும் பாராட்டுகின்ற இரண்டாவது விஷயம், காலத்தின் கலீஃபா அவர்கள் அணுஆயுதத்தை பயன்படுத்துவது தொடர்பாக எச்சரிக்கை செய்தது ஆகும். இன்றைய சூழ்நிலையில், இதுபோன்ற ஞானம் நிறைந்த தூதுச் செய்தியைக் கேட்பது எனக்கு மிகவும் நன்றாக உள்ளது.

ஆக, இதுதான் சில மக்களின் தாக்கங்களாக இருந்தன. இனி சில தகவல்கள் உள்ளன. தொடர்புடைய சில விஷயங்கள் உள்ளன. அதனையும் நான் எடுத்துரைப்பேன். அங்கு சீயோன் (Zion) பள்ளிவாசலில் எம்டிஏவில் நீங்கள் பார்த்திருப்பீர்கள். டூயியுடன் நடைபெற்ற முபாஹலாவை அடிப்படையாகக் கொண்டு ஒரு கண்காட்சி வைக்கப்பட்டிருந்தது. பத்திரிகைகளில் வெளியாகியிருந்த கட்டிங்ஸ் அங்கு வைக்கப்பட்டிருந்தது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மஜ்மூஆ இஷ்திஹாராத் தொகுதி 3-ல் 32 செய்தித்தாள்களின் பெயரை எழுதியுள்ளார்கள். அத்துடன் அன்னார் எழுதியுள்ளார்: நம்மை வந்தடைந்த பத்திரிகைகள் மட்டுமே இவை ஆகும். நூற்றுக்கணக்கான செய்தித்தாள்களில் இது குறிப்பிடப்பட்டிருக்கும் என்று இந்த அதிக எண்ணிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

எனவே அஹ்மதிய்யா ஜமாஅத் அமெரிக்கா இந்த அடிப்படையில் மேலும் ஆய்வு செய்தது. இன்னும் கூடுதலான பத்திரிகைகளில் தேடியது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் குறிப்பிட்ட அந்த32 பத்திரிகைகள் மட்டுமின்றி மேலும் 128 பத்திரிகைகள் கிடைத்தன. டூயிக்கு கொடுக்கப்பட்டிருந்த முபாஹலா சவால் அவற்றில் இடம்பெற்றிருந்தது. இவ்வாறு அந்தக் காலத்தில் அந்த செய்தித்தாள்களின் மொத்த எண்ணிக்கை 160 வரை எட்டியிருந்தது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் அமெரிக்காவின் 160 பத்திரிகைகள் இந்த செய்தியை வழங்கின. அந்த அனைத்து பத்திரிகைகளும் டிஜிட்டல் வடிவில் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசலுடன் வைக்கப்பட்டுள்ள கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன. மக்கள் வந்து அதனை பார்த்தனர்.

அடுத்து, சீயோன் பள்ளிவாசல் திறப்பு விழாவின் செய்தியை உலகமும் வழங்கியது. எனது சீயோன் நகர சுற்றுப் பயணம் மற்றும் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசல் தொடர்பாக அமெரிக்கன் நியூஸ் ஏஜென்ஸி அன்ட் பிரஸ் (Associated Press) கட்டுரையும் வெளியிட்டது. Two Prophets Century duel inspire Zion mosque என்பது அதன் தலைப்பாக இருந்தது. அதாவது, சீயோன் பள்ளிவாசலின் அடித்தளம் இரண்டு நபிமார்களுக்கு மத்தியில் ஒரு நூற்றாண்டு பழமை வாய்ந்த முபாஹலா ஆகும். இந்த மீடியாவின் ஆவுட்லிஸ்ட்டின் வெப்ஸைட்டிற்கேற்ப சுமார் உலகின் பாதி மக்கள் அதன் வாசகர்களாக உள்ளனர். இந்தக் கட்டுரை உலகின் 13 நாடுகளின் 412 அவுட்லிஸ்ட் மற்றும் செய்தித்தாள்களில் வெளியாகியுள்ளது. வாஷிங்டன் போஸ்ட், ஏபிஸி நியூஸ், டோரன்டோ ஸ்டார், தி ஹில் (The Hill) உட்பட இன்னும் பிரபலமான மற்ற பத்திரிகைகளில் இந்த முக்கியமான கட்டுரை வெளியாகி உள்ளது. இந்தக் கட்டுரையும் Associated Press-இன் முதல் பத்து கட்டுரையில் அடங்கும். கவனம் பெறவில்லை என்பது சரியல்ல. மாறாக, பத்து முக்கிய கட்டுரைகளில் அடங்கும். அந்தக் கட்டுரையில் இந்த விஷயம் கூறப்பட்டிருந்தது. அதாவது, சீயோனில் 115 ஆண்டுகளுக்கு முன்னர் பரிசுத்தமான ஓர் அற்புதம் நிகழ்ந்தது. உலகின் லட்சக்கணக்கான அஹ்மதி முஸ்லிம்கள் அதில் நம்பிக்கை வைத்துள்ளனர். சிகோகாவிலிருந்து 40 மைல் தொலைவில் மஷிகன்ஜீலின் கடற்கரையோரம் அமைந்துள்ள அந்த சிறிய நகரத்திற்கு அஹ்மதிகள் சிறப்பு முக்கியத்துவத்தை வழங்குகின்றனர். ஒரு நூற்றாண்டைக் காட்டிலும் அதிகமான காலத்திற்கு முன்பு அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு அந்த நகரத்துடன் ஒரு முன்னறிவிப்பின் மூலம் ஈடுபாடு ஏற்பட்டது. ஒரு கிறிஸ்தவ தியோகிரேஸி என்ற ரீதியில் ஜான் அலெக்ஸாண்டர் டூயி என்பவர் சீயோன் நகரத்திற்கு 1900 ஆண்டில் அடித்தளம் அமைத்தார். அவர் ஒரு (Evangelist) மற்றும் பெந்தேகோஸ்தின் ஆரம்பகால பிரச்சாரகராக இருந்தார். தங்களின் நிறுவனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது ஸாஹிப் அவர்கள் டூயியின் இஸ்லாத்திற்கெதிரான தீயபேச்சுகள் மற்றும் தாக்குதலுக்கு எதிரில் இஸ்லாத்தை தற்காத்தார்கள். மேலும், துஆக்களின் ஆயுதங்களை மட்டுமே பயன்படுத்தி ஆன்மீகப் போரில் அவரை தோற்கடித்தார்கள் என்பது அஹ்மதிகளின் கொள்கையாகும். அநேகமாக, தற்போது சீயோனில் வசிக்கும் நகரவாசிகளுக்கு அந்த பழைய காலத்து புனிதப்போரைக் குறித்து எந்த தகவலும் இல்லை. ஆயினும், அஹ்மதிகளுக்கு அது புனிதப் போராகும். அது சீயோன் நகரத்திற்கு ஒரு நிரந்தரமான தொடர்பை உருவாக்கிவிட்டது. அந்த ஒரு நூற்றாண்டு பழைய அற்புதத்தை நினைவுகூர்வதற்கும், சீயோன் நகரத்தின் வரலாறு மற்றும் தமது கொள்கையின் ஒரு முக்கியமான மைல்கல், மற்றும் நகரத்தின் முதல் அஹ்மதிய்யா பள்ளிவாசல் திறப்பை கொண்டாடுவதற்காகவும் உலகம் முழுவதிலிருந்தும் ஆயிரக்கணக்கான அஹ்மதி முஸ்லிம்கள் நகரத்தில் ஒன்றுகூடியுள்ளனர்.

அடுத்து, அந்தக் கட்டுரையில் இன்னும் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. மேலும், டூயியைக் குறித்தும் அவனது பழைய வரலாற்றை போதுமான அளவுக்கு அது எடுத்துக்கூறியுள்ளது.

அடுத்து அந்தக் கட்டுரை கூறுகின்றது: 1835-ல் பிறந்த தங்களது நிறுவனர் சீர்திருத்தவாதியாக இருந்தார் என்பதும் அவரைக் குறித்து இஸ்லாத்தின் தோற்றுனர் நற்செய்தி வழங்கியுள்ளார் என்பதும் அஹ்மதிகளின் கொள்கை ஆகும். ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் இரண்டாவது வருகையாக மிர்ஸா குலாம் அஹ்மது வந்துள்ளார் என்பதும் அவர்களின் கொள்கை ஆகும். இதுமட்டுமின்றி, சீயோன் சுற்றுப் பயணம் மற்றும் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசல் திறப்பு விழாவைக் குறித்தும் கனடாவில் பெரிய அளவில் அதிகமாக கவரேஜ் கொடுக்கப்பட்டுள்ளது.

கனடாவில் அல்லாஹ்வின் அருளால் 9 பெரிய பத்திரிகைகள், 6 ஆன்லைன் பப்ளிகேஷன்ஸ் மற்றும் ஒரு ரேடியோ ஸ்டேஷன் மூலமாக சீயோன் சுற்றுப் பயண கவரேஜ் செய்யப்பட்டுள்ளது. கனடாவில் 8லட்சத்து 57ஆயிரம் மக்கள் வரை தூதுச் செய்தி சென்று சேர்ந்துள்ளது. அமெரிக்கா, கனடா மட்டுமின்றி யூகே, யூனான், சிராலியோன், தாயிவான், இந்தியா, ஹாங்காங், பெரு, பிலிஃபைன்ஸ், தென் ஆஃப்ரிக்கா,தன்ஸானியா மற்றும் வேத் எனும் பெயர் கொண்ட ஆன்லைன் பத்திரிகைகளும் கவரேஜ் கொடுத்துள்ளன.

நான் குறிப்பிட்ட அமெரிக்கன் நியூஸ் ஏஜென்ஸி அசோஸியேட் பிரஸுடைய இந்த ஆர்டிகல் அமெரிக்காவில் 200 பத்திரிகைகளில் பிரிண்ட் ஆகியுள்ளது. மேலும், 176 ஆன்லைன் பத்திரிகைகளில் வெளியாகியுள்ளது.

இது மட்டுமன்றி, MTA ஆஃப்ரிக்காவின் மூலமாகவும் இந்த நிகழ்ச்சி நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டுள்ளது. சீயோன் (Zion) மற்றும் டேலஸில் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட சொற்பொழிவுகள் கேம்பியா தேசிய டிவி சேனல், சிராலியோன் தேசிய சேனல், செனிகால் டிவி ஆகிய சேனல்கள் மூலமாக நேரடியாக ஒளிபரப்பப்பட்டுள்ளது. அதனை

லட்சக்கணக்கான நபர்கள் பார்த்துள்ளனர். கூறுகின்றார்கள்: சீயோனில் ஃபத்ஹே அஸீம் பள்ளிவாசல் நிகழ்ச்சிக்கு அரை மணிநேரம் முன்னதாக நமது ஸ்டுடியோக்களில் நேரடி ஒளிபரப்பு ஆரம்பமானது. அதன் மூலம் உள்ளூர் மொழிகளில் அலெக்ஸான்டர் டூயியைக் குறித்த ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் முன்னறிவிப்பு பின்னணி எடுத்துரைக்கப்பட்டது. ஆஃப்ரிக்கா முழுவதும் நியூஸ் ரிப்போர்ட்ஸ் மூலமாகவும், டிவி, ரேடியோ மற்றும் பத்திரிகைகளிலும் கவரேஜ் கிடைத்துள்ளது. உகண்டாவில் ஐந்து சேனல்கள் மற்றும் கானா, நைஜீரியா, லைபீரியா, சிராலியோன், ரவாண்டா ஆகிய நாடுகளின் டிவி சேனல்களும் இந்த செய்தி அறிக்கையை ஒளிபரப்பின.

சிராலியோன் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:

எனது 20 ஆண்டுகள் பழைய நண்பர் ஒருவர் இருந்தார். அவர் இந்த ஜல்ஸா ஸாலானா சந்தர்ப்பத்தின்போது இந்த வருடம் பைஅத் செய்திருந்தார். அவர் சீயோன் நிகழ்ச்சியை பார்த்துவிட்டு கூறினார்: எந்த நாள் நான் பைஅத் செய்தேனோ அன்று இரவு நான் பைஅத் செய்வதில் எனக்கு ஏன் இவ்வளவு காலம் ஆனது? என்று எனக்கு மிகவும் வேதனை ஏற்பட்டது. ஆனால், நான் உண்மையை கூறுகின்றேன். நான் சீயோன் பள்ளிவாசல் நிகழ்ச்சியை பார்த்த நாளன்று நான் என்னிடத்திலேயே இவ்வாறு கூறினேன்: அதாவது, அமீர் சாஹிப் என்னிடம் அலெக்ஸான்டர் டூயினுடைய சம்பவத்தை எனக்கு முன்னரே கூறியிருந்தால் ஒருவேளை நான் 20 ஆண்டுகளுக்கு முன்பே பைஅத் செய்திருப்பேன்.

சீயோனின் இந்த முன்னறிவிப்பை நான் ஏற்றுக் கொண்டதுபோல் நான் ஒருபோதும் எந்த ஒரு மார்க்க நிகழ்வையும் ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. நான் அதனை அக்காலத்தின் மாபெரும் சவாலாக பார்க்கின்றேன்.

மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், இந்த சம்பவம் நமது காலத்தில் மேற்கத்திய மீடியாவின் முழுமையான ஆய்வின் கீழ் நடந்துள்ளது. ஹஸ்ரத் இமாம் மஹ்தி எதிர்காலத்தைக் குறித்து இவ்வாறு முன்னறிவிப்பு செய்துள்ளார்கள். அதாவது, எங்கிருந்து இறைவன் முடிவெடுக்கின்றானோ அங்கே அன்னார் (அலை) இருந்தார்கள் என்பதுபோல அன்னார் முன்னறிவிப்பு செய்தார்கள். பின்னர் அவர் கூறுகின்றார்: எனது கருத்தின்படி, நாம் ஜமாஅத்தைச் சாராத மக்களுக்கு தப்லீக் செய்யும்போதெல்லாம் நாம் சீயோனைக் குறித்து நிச்சயம் குறிப்பிட வேண்டும். ஏனெனில், இது ஒரு தாக்கம் மிகு முன்னறிவிப்பு மற்றும் சான்று ஆகும். எந்த நாளன்று நான் பைஅத் செய்தேனோ அன்று இரவு அநேகமாக நான் சரியான முடிவெடுத்துள்ளேன் என்று எனக்கு தோன்றியது. ஆனால், சீயோனின் இந்த முன்னறிவிப்பிற்கு பிறகு நான் நிம்மதி பெருமூச்சு வாங்கினேன். மேலும், 20 வருட கால எனது உண்மையின் தேடல் வீண்போகவில்லை என்பதில் எனக்கு முழுமையான உறுதி ஏற்பட்டுவிட்டது. நான் நிச்சயமாக சரியான முடிவெடுத்துள்ளேன்.

இது மட்டுமின்றி, பின்னர் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. வாஷிங்டனில், மஸ்ஜித் மேரிலேண்ட்டில், கானா, சிராலியோன் நாட்டு தூதர்களுடனும் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அவர்களுடைய நாடுகளின் நிலவரங்களைக் குறித்தும் பேசப்பட்டது. அவர்களுடன் நல்ல மீட்டிங் நடைபெற்றது. அடுத்து, புதிய அஹ்மதிகளுடனும் கூட்டம் நடைபெற்றது. சுமார் 45 புதிய அஹ்மதிகள் அங்கு வந்திருந்தனர். பழைய அமெரிக்கன் அஹ்மதிகளையும் தேடும்படி நான் அவர்களிடம் கூறியிருந்தேன். அவர்களில் ஒரு சிலரை அவர்கள் தேடியிருந்தார்கள். மேலும், புதிதாக பைஅத் செய்யக் கூடியவர்களுக்கு அங்கு எதிர்ப்பும் உருவாகியுள்ளது. ஆயினும் அவர்கள் உறுதிப்பாட்டுடன் உள்ளனர்.

ஒரு புதிய அஹ்மதி கூறுகின்றார்: எனது குடும்பத்திற்கு தெரிய வந்தபோது அவர்கள் கடுமையாக எதிர்த்தனர். அதன் பிறகு என்னை விட்டுவிட்டு சென்றுவிட்டனர். அடுத்து ஒரு பங்களாதேஷைச் சார்ந்த ஒரு அஹ்மதி இருக்கின்றார். அவர் கூறினார்: எனக்கு அதிக நேரம் செலவழித்து முரப்பி சாஹிப் மிகப் பொறுமையுடன் எனக்கு புரிய வைத்தார். தற்போது எனக்கு புரிந்துவிட்டது. பின்னர் மிகவும் உத்வேகத்துடன் மற்ற புதிய அஹ்மதிகளிடம் இவ்வாறு கூறினார்: நான் அஹ்மதிய்யத்தை இப்போது புரிந்து கொண்டேன். இதுவே சரியான இஸ்லாம் ஆகும். எனவே ஒருபோதும் விட்டுவிடக் கூடாது என்று நான் உங்களிடம் கூறிக் கொள்கிறேன்.

ஒரு புதிய அஹ்மதி, அமெரிக்கன் கிரிஸ்டோஃபர் (Christopher) என்பவர் கிறிஸ்தவத்திலிருந்து அஹ்மதி ஆகியிருந்தார். அவர் பைஅத்திற்காக விண்ணப்பித்திருந்தார். எனவே பைஅத்தும் நடைபெற்றது. அந்த பைஅத்தினால் அங்கு மக்களிடம் நல்ல தாக்கம் ஏற்பட்டது. அங்கு வசிக்கக்கூடிய பழைய அஹ்மதிகள் அல்லது ஏராளமான புதிய மக்கள், பாகிஸ்தான் அகதிகள் (Refugees) ஆகியோர் பல்வேறு நாடுகளிலிருந்து அங்கு வந்திருந்தனர். அவர்கள் அனைவருக்கும் பைஅத்திற்கான சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. அதன் காரணமாக மிகவும் உணர்வுப்பூர்வமான நிலை உருவாகிவிட்டது.

எவ்வாறு இருப்பினும், அல்லாஹ்வின் அருளால் ஒட்டு மொத்த அளவில் அல்லாஹ் இந்த சுற்றுப் பயணத்தை எல்லா ரீதியிலும் தனது அருட்களை நல்கியுள்ளான். அல்லாஹ் எதிர்வரும் நாட்களிலும் எப்போதும் அருளிக் கொண்டே இருப்பானாக! (ஆமீன்)

தமிழாக்கம் :

மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

## 12-ம் பக்கத்தின் தொடர்ச்சி...

அன்னார் (அலை) கூறினார்கள்: உள்ளத்தில் இறையச்சம் இருக்கும்போதுதான் உயர் மதிப்புகளும், உயர் நல்லொழுக்கங்களும் உருவாகின்றன. நமது ஜமாஅத்திற்கு குறிப்பாக தக்வாவிற்கான தேவை உள்ளது. அதிலும் குறிப்பாக, இறைவன் புறமிருந்து தோன்றியதாக வாதம் செய்துள்ள நபருடன் தாங்கள் தொடர்பு வைத்துள்ளதாகவும், அவரது ஜமாஅத்தின் பைஅத்தின் கீழ் இருப்பதாக அவர்கள் கருதுவதாலும் அவர்கள் தக்வாவை மேற்கொள்வது அவசியமாகும். அப்போதுதான் ஒருவர் எவ்வளவுதான் பகைமை, காழ்ப்புணர்ச்சி அல்லது தீமையில் மூழ்கியிருந்தாலும் சரியே அல்லது எவ்வளவு தான் அவர் உலகவாதியாக இருந்தாலும் சரியே அவர் அந்த அனைத்து ஆபத்துகளிலிருந்தும் இரட்சிப்பு பெறுவார். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 10, பதிப்பு 1984)

அடுத்து அன்னார் (அலை) கூறினார்கள்: நமது ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் இந்த உலகின் அனைத்து துன்பங்களை காட்டிலும் தமது ஆன்மாவின் மீது கவலை கொள்ளுங்கள். உலகின் பெரும் துன்பங்கள் மனிதனுக்கு இருக்கின்றன. ஆனால், கூறினார்கள்: இல்லை: அந்த வேதனை, எல்லாவற்றையும் விட அதிகமாக உள்ளத்தில் இருக்க வேண்டும். அது என்ன வேதனை? தம்மிடம் தக்வா உள்ளதா? இல்லையா? (என்ற வேதனை அவரிடம் இருக்க வேண்டும்). (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 35, பதிப்பு 1984)

எனவே நாம் பைஅத்தின் உரிமையை வழங்க வேண்டும் என்றால், நாம் அல்லாஹ்வின் கருணைகளுக்கு நன்றி செலுத்தக்கூடியவர்களாக வேண்டும் என்றால், பின்னர் நாம் நமது நிலைமைகளைக் குறித்து எப்போதும் ஆய்வு செய்து கொண்டிருப்பது அவசியமாகும். நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப நமது வாழ்க்கையை கழிப்பவர்களாகவும், உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குபவர்களாகவும் திகழ்வதற்கு அல்லாஹ் நம் அனைவருக்கும் நற்பேறு வழங்குவானாக. அல்லாஹ்வின் மீதான அச்சம் நம்மிடம் உருவாகிவிட்டுமாக. நாம் உண்மையிலேயே கலிமாவிற்குரிய உரிமையை செலுத்துபவர்களாக திகழ்வோமாக. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த இறுதியானவர்களின் ஜமாஅத்தைக் குறித்து நற்செய்தி வழங்கியுள்ளார்களோ அவரின் ஜமாஅத்தில் நாம் இணைந்து விடுவோமாக. அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக.

இன்றிலிருந்து 28 ஆண்டுகளுக்கு முன்பு இதே நாளில் 14 அக்டோபர் அன்று இந்த பள்ளிவாசலும் திறக்கப்பட்டது என்று தற்போது வரும்போது அமீர் சாஹிப் அவர்கள் கூறினார்கள். தற்போது இந்த பள்ளிவாசலுக்கு 28 ஆண்டுகள் ஆகிவிட்டன.

இந்த 28 ஆண்டுகளில் தமது ஆன்மீகத்தில் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளோம் என்று இங்கு வசிக்கக் கூடியவர்களும், இந்த பகுதியில் வசிக்கக் கூடியவர்களும், பழைய அஹ்மதிகளும், புதிதாக வரக் கூடியவர்களும் ஒவ்வொருவரும் ஆய்வு செய்து பார்க்க வேண்டும். எந்த அளவிற்கு பள்ளிவாசலுக்கான உரிமையை செலுத்த முயற்சி செய்தோம் என்றும் பார்க்க வேண்டும்.

அல்லாஹ் எதிர்காலத்திலும் பல நூற்றாண்டுகள் வரை இந்த பள்ளிவாசலுக்கு வரக் கூடியவர்களை வழங்கிக் கொண்டிருப்பானாக. மேலும், இந்த பள்ளிவாசல் எல்லாவகையான உலகியல் ஆபத்துகளிலிருந்தும் தப்பித்து இருக்கட்டுமாக. ஆனால், நாம் பள்ளிவாசல்களுக்குரிய உரிமையை வழங்கியவாறு அவற்றை நிரப்புவதற்கு நாம் முயற்சி செய்யும்போதுதான் இந்த உரிமை செலுத்தப்படும். அல்லாஹ் அதற்கும் நற்பேறை நமக்கு வழங்குவானாக.

தமிழாக்கம் :

மவ்லவி அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் செய்துள்ள பைஅத்தின் உரிமைகளை செலுத்துவது தொடர்பாகவும், நமது ஆன்மீக மற்றும் நல்லொழுக்க நிலைகளில் மேன்மையை உருவாக்குவது தொடர்பாகவும் அறிவுரைகள்**

**நீங்கள் உலகவாதிகளைப் போன்று இருந்தால் பின்னர் நீங்கள் எனது கையில் செய்த தவ்பாவிற்கு எந்த பயனும் பெறவில்லை. எனது கையில் தவ்பா செய்வது என்பது ஒரு மரணத்தை விரும்புகின்றது.**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **மேரிலேண்ட், அமெரிக்காவிலுள்ள பைத்துர் ரஹ்மான் பள்ளிவாசலில் 14 அக்டோபர் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு அகா மாதம் **14ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

சென்ற இதழின் தொடர்ச்சி

தொழுகைக்கான நேரங்களில் (குறித்த நேரத்தில்) தொழுவதன் பக்கம் நமக்கு உடனடியாக கவனம் ஏற்படவில்லையென்றால், நாம் உலகியல் பணிகளை விட்டுவிட்டு அல்லாஹ்வின் குரலுக்கு உடனடியாக செவி சாய்த்தவாறு தொழுகைக்காக ஆஜராகவில்லையென்றால், அந்நிலையில் நாம் வெறும் வாயளவில் கலிமா கூறுபவர்களாக இருக்கின்றோம். மேலும் ஒரு மறைவான ஷிர்க் உள்ளது என்று பொருள். நமது உலகியல் வியாபாரங்கள் அல்லாஹ்விற்கு எதிரில் நிற்கின்றன என்று பொருள். ஒரு நம்பிக்கையாளர் இந்த நம்பிக்கையில் நிலைபெற்றிருக்கின்றார். நிலை பெற்றிருக்க வேண்டும். அதாவது, எனது வியாபாரங்களிலும், எனது பணிகளிலும் அல்லாஹ்வின் அருளின் மூலமே பரக்கத் ஏற்படுகின்றது. மேலும் ஏற்படும் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். இந்த நிலையிருந்தால், பின்னர் தனது உலகப் பணிகள் அல்லாஹ்வின் குரலுக்கு எதிராக வந்து நின்றுவிடும் என்பது எவ்வாறு சாத்தியம்? ஒருவேளை அவ்வாறு வந்து நின்றால், பின்னர் நாம் கலிமாவின் ஆன்மாவையே புரியவில்லை (என்று பொருள்). நாம் வாயினால் கலிமா கூறுகின்றோம். ஆனால் செயல் நமது கூற்றுகளுக்கு பொருத்தமானதாக இல்லை. நாம் நீருற்றிற்கு அருகில் வந்துவிட்டோம். ஆனால், தண்ணீர் அருந்துவதற்காக கைகளை நீட்டவில்லை (என்று பொருள்).

எனவே, ஒருவேளை இவ்வாறான நிலைமை இருந்தால் பின்னர், பைஅத்திற்குரிய உரிமை வழங்கப்படவில்லை என்று அன்னார் (அலை) கூறியுள்ளார்கள்.

இந்த கலிமா ஷஹாதத் இந்த விஷயத்தை மட்டுமே போதிக்கவில்லை. மேலும், அல்லாஹ்விற்குரிய உரிமையை வழங்கவேண்டும் என்பதன் பக்கம் மட்டுமே கவனமூட்டுதில்லை. மாறாக, அடியார்களின் எந்த உரிமைகளை வழங்குவதன் பக்கம் அல்லாஹ் அறிவுறுத்தியுள்ளானோ, மேலும் கட்டளை வழங்கியுள்ளானோ அதன்படி அமல் செய்வதன் பக்கமும் கவனமூட்டுகிறது. மனிதன் இந்த இரண்டு உரிமைகளையும் வழங்கும்போதுதான் உண்மையான நம்பிக்கையாளர் என்றழைக்கப்படுவார். மேலும், அப்போதுதான், ஓர் உண்மையான நம்பிக்கையாளர், உண்மையான அஹ்மதி முஸ்லிம், பைஅத்தின் உரிமைகளை வழங்குவார்.

பின்னர், அன்னார் (அலை) தமது பைஅத்தின் கீழ் வரக்கூடியவர்களுக்கு அறிவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

**நீங்கள் உலகவாதிகளைப் போன்று இருந்தால் பின்னர் நீங்கள் எனது கையில் செய்த தவ்பாவிற்கு எந்த பயனும் பெறவில்லை. எனது கையில் தவ்பா செய்வது என்பது ஒரு மரணத்தை விரும்புகின்றது.** அப்போதுதான் ஒரு புதிய வாழ்க்கையில் மற்றொரு பிறப்பை பெறுவீர்கள். அதாவது, பைஅத் செய்த பிறகு உங்களுக்கு ஒரு புதிய ஆன்மீக வாழ்க்கை கிடைக்க வேண்டும். அந்த ஆன்மீக வாழ்க்கை கிடைக்கவில்லையென்றால், மேலும் அதே உலகியல் ஆசைகளும், முன்னுரிமைகளும் இருக்கின்றன என்றால் பின்னர் அதுபோன்ற பைஅத் எந்த பயனையும் தராது.

கூறினார்கள்: பைஅத் உள்ளத்தால் நடைபெறவில்லையென்றால், அதற்கு எந்த விளைவும் இருக்காது.

என்னிடம் பைஅத் செய்வதற்கு இறைவன் உள்ளத்தின் ஒப்புதலை விரும்புகின்றான். எனவே எவர் என்னை உண்மையான உள்ளத்துடன் ஒப்புக் கொள்கிறாரோ மேலும் எவர் தனது பாவங்களிலிருந்து (விலகி) உண்மையான தவ்பா செய்கின்றாரோ. அத்தகைய நபரின் பாவங்களை தாயின் வயிற்றிலிருந்து வெளிவந்தது போன்று கஃபூர் மற்றும் ரஹீமாக இருக்கும் இறைவன் மன்னித்துவிடுகின்றான். வானவர்கள் அவரை பாதுகாக்கின்றனர்.

அவர் முற்றிலும் களங்கமற்றவராகி-விடுகின்றார். கூறினார்கள்: ஒரு கிராமத்தில் ஒரு நல்ல மனிதர் இருக்கின்றார் என்றால், அல்லாஹ் அந்த நல்லவரின் காரணமாக அந்த கிராமத்தை அழிவிலிருந்து பாதுகாத்துவிடுகின்றான். ஆனால், அழிவு வரும்போது பின்னர் அனைவரின் மீதும் வருகின்றது. ஆயினும் கூட அவன் தனது அடியார்களை ஏதாவது ஒரு வழியில் காப்பாற்றிவிடுகின்றான். ஒருவர் நல்லவராக இருந்தாலும், அவருக்காக மற்றவர்களும் பாதுகாக்கப்படுகின்றனர். இதுவே இறைவனின் நடைமுறை ஆகும். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 263, பதிப்பு 1984)

எனவே இந்த அடிப்படையான விதிமுறைகளை நினைவிற்கொள்ள வேண்டும். அல்லாஹ் தனது தூய அடியார்களின் துஆக்களை கேட்கின்றான். மேலும் அவர்களின் நற்செயல்களை ஒப்புக் கொள்கின்றான். எனவே, நமது இறைவணக்கங்கள் அல்லாஹ்விற்கு மட்டுமானதாகவே இருக்க வேண்டும் என்பதற்காகவும், நமது அமல்கள் அல்லாஹ்வின் திருப்தியை பெறக் கூடியதாக இருக்கவேண்டும் என்பதற்காகவும் நாம் முயற்சி செய்ய வேண்டும்.

**நம் மீது மிகவும் அபாயகரமான அழிவின் மேகங்கள் சூழ்ந்துள்ளன என்பது இன்றைய நாட்களில் நிலவும் உலகின் நிலைமைகளிலிருந்து வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறது. ரஷ்யா அனு ஆயுதங்களைப் பயன்படுத்தினால் பின்னர், அதற்கு பதிலடியாக எதிர் தரப்பிலிருந்தும் பதில் நடவடிக்கை இருக்கும். பின்னர் நிகழும் அழிவுகள் உலகின் முடிவிற்கு காரணியாக அமையும் என்று அமெரிக்காவின் அதிபர் நேற்று இந்த விஷயத்தை கூறியுள்ளார். எனவே நாங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று இந்த நாடுகளில் வசிப்பவர்கள் கருதாதீர்கள். மேலும் ஹிஜ்ரத் செய்து இங்கு வந்துள்ளவர்களும் அவ்வாறு எண்ணம் கொள்ளாதீர்கள். எந்த ஓர் இடமும் பாதுகாப்பானதல்ல. இந்த வல்லரசு நாடுகளின் தலைவர்களின் மூளை மாறிவிடும் போது பின்னர் அவர்கள் எதனையும் பார்ப்பதில்லை.**

எனவே இந்த நிலைமைகளில் துஆக்கள் செய்வதும், தமது இறை வணக்கங்களை அல்லாஹ்விற்கு மட்டுமே உரியதாக ஆக்கிக் கொள்வதும் அஹ்மதிகளின் பணியே ஆகும். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறியது போன்று, நன் மக்களுக்காக, தனது தூய அடியார்களுக்காக அல்லாஹ் மற்றவர்களையும் காப்பாற்றிவிடுகின்றான். மேலும், இதுவே அல்லாஹ்வின் வேதத்திலிருந்து, திருக்குர்ஆனிலிருந்து நமக்கு தெரிய வருகின்றது. எனவே, **இங்கு வந்து நாம் பாதுகாப்பு பெற்றுவிட்டோம். நமது பிள்ளைகளின் எதிர்காலம் பாதுகாப்பு பெற்றதாகிவிட்டது என்று எவரும் இந்த எண்ணத்தில் இருக்கக் கூடாது. இன்னும் கூறப்போனால் நாம் மிகவும் அபாயகரமான காலத்தை நாம் கடந்து கொண்டிருக்கின்றோம். இது போன்ற நிலைமைகளிலிருந்து ஒருவரால் காப்பாற்ற முடியும் என்றால், அது அல்லாஹ்வால் மட்டுமே ஆகும்.**

எனவே நீங்களும் அவனுக்கு முன்னால் குனியுங்கள். மேலும் உங்களின் சந்ததிகளையும் அல்லாஹ்விற்கு முன்னால் குனியச் செய்யக் கூடியவர்களாக ஆகிவிடுங்கள். அப்போதுதான் உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள முடியும். மேலும் உங்களது சந்ததிகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இந்த உலகம் நம்மையும் பாதுகாக்காது. நமது சந்ததிகளின் எதிர்காலத்தையும் பாதுகாக்காது. இன்னும் கூறப்போனால், கலிமாவின் உரிமையை வழங்கக் கூடியவர்களாக நாம் திகழ்ந்தால் பின்னர் அல்லாஹ் நமது பணிவான துஆக்கள் மற்றும் நற்செயல்களின் காரணமாக உலகத்தை பாதுகாத்து விடுவான்.

எனவே இன்றைய காலத்தின் நிலைமைகளில் இந்த அடிப்படையிலும் அதிகமாக துஆக்கள் செய்யுங்கள். உலகத்தின் நிலைமைகள் உச்சத்தை தாண்டி மோசமாகிவிடுவதற்கு முன்னர் துஆக்கள் செய்யுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

காலத்திற்கு முன்னர் செய்யப்படுவதே நன்மையாகும். காலம் தாழ்த்தி ஏதாவது ஒன்றை செய்தாலும் அதனால் பயனல்ல. இயல்பின் வேகத்தால் மட்டுமே செய்யப்படும் நன்மையை இறைவன் ஒப்புக் கொள்வதில்லை. கப்பல் கவிழும்போது அனைவரும் அழுகின்றனர்.

கப்பல் கவிழத் தொடங்கும்போது அனைவரும் அழத் தொடங்கிவிடுகின்றனர். ஆனால், அந்த அழுகையும், கூக்குரலும் இயல்பின் தேட்டத்தின் விளைவாக இருக்கின்றது.

எனவே அந்த நேரத்தில் அது பயனளிப்பதில்லை. அது அதற்கு முன்னரே இருந்திருந்தால் தான் பயனளிக்கும். அமைதி நிலவிய போது அது அமைந்திருக்க வேண்டும்.

கூறினார்கள்: நன்றாக புரிந்து கொள்ளுங்கள். இறைவனை அடைவதற்கு இதுவே வழிமுறையாகும். எவர் குறித்த நேரத்திற்கு முன்னரே விழிப்பாகவும், எச்சரிக்கையாகவும் இருக்கின்றாரோ, அதுவும் தம் மீது மின்னல் விழுவது போன்ற எச்சரிக்கை அவரிடம் இருக்க வேண்டும். அத்தகைய நபர் மீது ஒருபோதும் அது விழாது. மின்னல் விழப்போகின்றது என்று அவர் சிந்தித்தால், விழிப்பாக இருந்தால் பின்னர் எவ்வளவு மின்னல் வெட்டினாலும் அவர் மீது மின்னல் விழாது. ஆனால், எவர் மின்னல் விழுவதைக் கண்டு கூக்குரலிடுகின்றாரோ, அவர் மீது மின்னல் விழும். மேலும் அவரை அழித்து விடும். அவர் மின்னலுக்கு அஞ்சுகின்றாரே தவிர இறைவனுக்கு அஞ்சவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 265, பதிப்பு 1984)

எனவே, இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்த வேண்டும் என்றால் இப்போது ஏற்படுத்திக் கொள்ளுங்கள் என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் தெளிவாக நம்மை எச்சரித்து விட்டார்கள். தற்போது அபாயத்தின் மேகம் சிறிதளவே சூழ்ந்துள்ளன அல்லது குறைந்தபட்சம் எப்படி உள்ளன என்றால் விரும்பினால் அவற்றை கட்டுப்படுத்திவிட முடியும். ஆயினும் எந்நேரமும் அவை பரவிவிடக் கூடும்.

எனவே, அஹ்மதிகளின் ஈமானும், அல்லாஹ்வுடனான தொடர்பும், துஆக்களும் உலகை அழிவிலிருந்து பாதுகாக்க முடியும்.

துஆக்களின் பக்கம் மேலும் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: பாருங்கள்! நீங்கள் சிறிது உழைத்து நிலத்தை தயார் செய்யும்போதுதான் நன்மைக்கான நம்பிக்கையும் ஏற்படுகின்றது. இவ்வாறு அமைதி நிறைந்த காலம் உழைப்பிற்கானதாகும். தற்போது நீங்கள் இறைவனை நினைவுகூர்ந்தால் பின்னர் அதன் இன்பத்தை பெறுவீர்கள். உலகப் பணிகளை விட்டுவிட்டு தொழுகைகளுக்காக(பள்ளிக்கு) வருகை தருவது கடினமானதாக இருக்கலாம்.

அன்னார் (அலை) மிகவும் தெளிவாக கூறியுள்ளார்கள்: பாருங்கள்! உலகப் பணிகளுக்கு எதிரில் தொழுகைகளில் ஆஜராகுவது கடினமானதாக இருக்கலாம். மேலும் தஹஜ்ஜுத் என்பது இன்னும் கடினமாக இருக்கும். கூறினார்கள்: தற்போது நீங்கள் உங்களை அதற்கு பழக்கமுடையவராக ஆக்கிக் கொண்டால் பின்னர் எந்த ஒரு துன்பமும் இருக்காது. நீங்கள் துஆக்கள் செய்தால் பின்னர் கண்ணியமும், கருணையும் மிக்க இறைவன் கருணை செய்வான். கூறினார்கள்: பாருங்கள்! தற்போது நீங்கள் பணி செய்கின்றீர்கள் (அதாவது, உலக பணிகளும் கூட நீங்கள் செய்கின்றீர்கள்). உங்கள் ஆன்மாவின் மீதும் குடும்பத்தினரின் மீதும் நீங்கள் கருணை செய்கின்றீர்கள் (அதாவது, அவர்களின் தேவைகளைக் குறித்து கவலை கொள்கின்றீர்கள்). பிள்ளைகள் மீது உங்களுக்கு கருணை ஏற்படுகின்றது. (உலகியல் ரீதியில் நீங்கள் கருணை காட்டுவது ஒரு வழிமுறையாகும்). நீங்கள் தற்போது அவர்கள் மீது கருணை காட்டுகின்றீர்கள். மற்றொரு வழிமுறையும் உள்ளது. (அந்த வழிமுறை என்பது என்ன?) அது தொழுகைகளில் அவர்களுக்காக துஆக்கள் செய்வது ஆகும். ருகூவிலும் துஆக்கள் செய்யுங்கள். பின்னர் ஸஜ்தாக்களிலும் துஆக்கள் செய்யுங்கள். அல்லாஹ் இந்த துன்பத்தை அகற்றிவிடுவானாக. மேலும் தண்டனையிலிருந்து பாதுகாப்பானாக.

எவர் துஆ செய்கின்றாரோ அவர் இழப்பிற்குரியவராக இருப்பதில்லை.

கவனமற்று இருப்பவரைப் போன்றும், தீயவரைப் போன்றும், துஆக்கள் செய்யக் கூடியவர் அழிக்கப்படுவது ஒருபோதும் சாத்தியமல்ல. அவ்வாறு இல்லையென்றால் பின்னர் இறைவன் ஒருபோதும் அடையாளம் காணப்பட முடியாது. அவன் தனது உண்மையான அடியார்களையும், மற்றவர்களையும் வேறுபடுத்திவிடுகின்றான். ஒருவர் காப்பாற்றப்படுகின்றார். மற்றொருவர் பிடிக்கப்படுகின்றார். சுருக்கமாக, முழுமையான முறையில் உங்களிடத்தில் உண்மையையும், தூய்மையையும் உருவாக்கிக் கொள்ளுங்கள். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 266, பதிப்பு 1984)

ஆக, இந்த விஷயங்கள் பிளேக் நோய் பரவியிருந்த அந்தக் காலத்தில் கூறப்பட்ட விஷயங்கள் ஆகும். ஆனால், இன்றைய நாட்களிலும் உலகளாவிய அழிவின் அடையாளங்கள் தென்பட்டு வருகின்றன. நான் கூறியதுபோன்று, குறிப்பாக நாம் அல்லாஹ்வின் முன் குனிவதும் அதற்கு அவசியம் ஆகும். மேலும், இதுவே நம்மை நாம் பாதுகாத்துகொள்வதற்கும், உலகை பாதுகாப்பதற்குமான ஒரே வழியாகும்.

அடுத்து, ஜமாஅத்திற்கு உயர் நல்லொழுக்கத்திற்கான அறிவுரையையும் அன்னார் (அலை) குறிப்பாக செய்துள்ளார்கள். ஏனெனில், உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவதும் அல்லாஹ்வின் கட்டளைகளில் ஒரு கட்டளை ஆகும்.

எனவே, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒழுக்கத்தை சீராக வைப்பது மிகவும் கடினமான பணியாகும். மனிதன் தன்னை ஆய்வு செய்து கொண்டிருக்காதவரை இந்த சீர்திருத்தம் நடைபெற முடியாது. தம்மை ஆய்வு செய்து கொண்டிருக்காத வரை, நாள் முழுவதும் பேசி வரும் பேச்சுகளை ஆய்வு செய்து வராத வரை, எவ்வாறு வாழ்க்கையை கழித்தோம்? நாளை கழித்தோம்? என்று ஆய்வு செய்து வராத வரை, என்ன நன்மை செய்தோம்? என்ன தீமை செய்தோம்? என்ன நல்ல விஷயம் பேசினோம்? என்ன தவறான விஷயம் பேசினோம்? என்று இந்த ஆய்வுகளை செய்து வராத வரை சீர்திருத்தம் நடைபெற முடியாது.

**கூறினார்கள்: நாவிலான தீய ஒழுக்கங்கள் பகைமையை உருவாக்குகின்றன. எனவே எப்போதும் தமது நாவை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும்.**

கூறினார்கள்: பாருங்கள்! தனது நலன் விரும்பியாக கருதும் ஒருவரிடம் எவரும் பகைமை பாராட்ட மாட்டார். அவ்வாறிருக்க, தனது ஆன்மாவின் மீது கூட கருணை காட்டாத, தனது உயிரை அபாயத்தில் வீழ்த்திக் கொள்ளும் அந்த நபர் எவ்வளவு அறிவிலி ஆவார்! அவரோ தமது ஆற்றல்களிலிருந்து நல்ல பணிகளை பெறுவதில்லை. மேலும் நல்லொழுக்க ஆற்றல்களை சீர்படுத்திக் கொள்வதில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 346, பதிப்பு 1984)

அதாவது அறிவுக்கூர்மையின் தேட்டம் என்னவென்றால், மனிதனுக்கு அல்லாஹ் வழங்கியுள்ள ஆற்றல்களுக்கும், திறமைகளுக்கும் எந்த அளவிற்கு பயிற்சி கொடுக்க வேண்டும் மேலும், எந்த அளவில் அதனை பயன்படுத்த வேண்டும் என்றால் மனிதனின் ஒவ்வொரு செயலிலும் உயர் நல்லொழுக்கங்கள் வெளிப்பட வேண்டும். சின்னச் சின்ன விஷயங்களில் தீய ஒழுக்கத்தை வெளிப்படுத்தினால் பின்னர் உங்களது உயிரை நீங்களே அபாயத்தில் வீழ்த்திக் கொள்வீர்கள்.

இந்த விஷயத்தையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது, எங்கு தனிப்பட்ட விவகாரங்களில் பொறுமை, கட்டுப்பாடு மற்றும் உயர் நல்லொழுக்கங்களை வெளிப்படுத்துவதற்கும், சண்டை சச்சரவுகளிலிருந்து விலகியிருப்பதற்கும் இஸ்லாம் போதிக்கின்றதோ அங்கு சட்டத்தின் எல்லைக்குள் இருந்து கொண்டு மார்க்க தன்மானத்தை வெளிப்படுத்துவதன் பக்கமும் கவனமூட்டுகின்றது.

எனவே அந்த மார்க்க தன்மானத்தை வெளிப்படுத்துவதன் பக்கம் கவனமூட்டியவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒரு நபர் உயர் அமைப்பிலிருந்து அதாவது இஸ்லாமிய மார்க்கத்திலிருந்து பகிரங்கமாக வெளியேறி ஏசிபேசுகின்றார் என்றால், மேலும் அபாயகரமான பகைமை கொள்கின்றார் என்றால் அவரது விவகாரம் வேறு ஆகும். ஸஹாபிகளுக்கும் கடினங்களை எதிர்கொள்ள நேரிட்டது. மேலும், தமது சில உறவினர்கள் தரப்பிலிருந்து இஸ்லாத்திற்கு எதிரான அவமரியாதைகளை அவர்களுக்கு கேட்க நேரிட்டது. அப்போது மிக நெருங்கிய தொடர்புகள் இருந்தபோதிலும் அவர்களுக்கு இஸ்லாத்திற்கு முன்னுரிமை வழங்க நேரிட்டது. (அதாவது நெருங்கிய தொடர்புகள் இருந்தபோதிலும் அவர்களிடமிருந்து விலகநேரிட்டது)

கூறினார்கள்: ஒரு நபர் இஸ்லாத்தின் கொடிய எதிரியாக இருக்கின்றார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏசிபேசுகின்றார். அவரிடம் தொடர்பை முறித்துக் கொள்ளுதல், மற்றும் வெறுப்பை வெளிப்படுத்துவதற்கு அத்தகைய நபர் தகுதி படைத்தவர் ஆவார். ஆயினும், ஒருவர் தனது செயல்களில் சோம்பலை வெளிப்படுத்துக் கூடியவராக இருக்கின்றார் என்றால் அவரது தவறுகளை மன்னிப்பதற்கும், அவரிடம் வைக்கப்பட்டுள்ள தொடர்புகளில் பாதிப்பு ஏற்படாமல் இருக்கும் அளவில் பார்த்துக் கொள்வதற்கு அவர் தகுதி படைத்தவர் ஆவார். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 346)

அதாவது, ஒருவர் எதிர்க்க-வில்லையென்றால் பின்னர் அவருடன் தொடர்பு வையுங்கள். நல்ல முறையில் தொடர்பு வையுங்கள். ஆனால், வெளிப்படையாக எதிர்க்கின்றார் அல்லது இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை ஏசிபேசுகின்றார் என்றால், புரிய வைத்த பிறகும் விலகவில்லையென்றால் பின்னர் அங்கு மார்க்க தன்மானத்தை வெளிப்படுத்த வேண்டும். மேலும், அதே போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விவகாரத்திலும் ஒவ்வொரு அஹ்மதியும் மார்க்க தன்மானத்தை வெளிப்படுத்த வேண்டும்.

எந்த நபர் புரிய வைத்த பிறகும், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு எதிரான சிந்தனையிலிருந்து விலகுவதில்லையோ அந்த நபரிடமும் நாம் நட்புக் கரத்தை நீட்ட முடியாது. மேலும் எந்த ஓர் அஹ்மதியின் தன்மானமும் அதனை பொறுத்தும் கொள்ளாது.

உங்களில் பாகிஸ்தானிலிருந்து இங்கு வந்துள்ள நபர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றீர்கள். அங்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு எதிராக எந்த அளவிற்கு மிக மோசமான வார்த்தைகளை, பேச்சுகளை பெயர் தாங்கி முல்லாக்கள்

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 17 November 2022 Issue No. 46

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

பயன்படுத்துகின்றார்கள் என்பதில் அவர்களுக்கு சொந்த அனுபவம் இருக்கும். அத்தகைய நபர்களிடம் அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்றோ அல்லது அவர்களின் தீங்கு அவர்கள் பக்கமே திரும்புவதற்கு துஆ செய்யக் கூடாது என்றோ நம்மிடம் கூறப்பட்டால் நமது தன்மானம் அதனை சகித்துக் கொள்ளாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறிய அதே வழிமுறை இங்கும் பொருந்தும். ஆயினும், நாம் அதுபோன்ற மக்களுக்கு எதிராக சட்டத்தையும் கையில் எடுக்க மாட்டோம். ஏனெனில் எந்நிலையிலும், சட்டத்தை உங்கள் கையில் எடுக்கக் கூடாது என்பதும் இஸ்லாமிய போதனையின் அங்கமாகும்.

அடுத்து, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் பைஅத் செய்த பிறகு அஹ்மதிகளிடம் இருக்க வேண்டிய மற்றொரு சிறப்பை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்: பரஸ்பரம் அன்பையும், சகோதரத்துவத்தையும் உருவாக்குங்கள்.

இதற்கு போதனை வழங்கியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

**தங்களுக்குள் பரஸ்பரம் உண்மையான அனுதாபம் கொள்ளாத வரை நமது ஜமாஅத்தில் பசுமை ஏற்படாது. எவருக்கு முழுமையான ஆற்றல் வழங்கப்பட்டுள்ளதோ அவர் பலவீனமானவருக்கு உதவி செய்யட்டும். அதாவது, வழங்கப்பட்டுள்ள அனைத்து ஆற்றல்களையும், திறமைகளையும் பயன்படுத்தி பலவீனமானவர்களுடன் அன்பு செலுத்த வேண்டுமே தவிர வெறுப்பை வெளிப்படுத்தக் கூடாது.**

அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: ஒருவர் மற்றவரிடம் தடுமாற்றத்தைக் கண்டு நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளாமல் வெறுப்புடன் சிலர் நடந்து கொள்கின்றனர் என்பதை நான் செவியேற்கின்றேன். இந்த வழிமுறை சரியானதல்ல.

அன்னார் (அலை) கூறினார்கள்: ஒருவர் மற்றவரின் குறைகளை திரையிடும்போதும், உண்மையான சகோதரர்களைப் போன்று ஒருவர் மற்றவரிடம் நடந்து கொள்ளும்போதுதான் அது ஜமாஅத்தாக இருக்கும்.

அன்னார் (அலை) அவர்கள் மிகவும் வேதனையுடன் கூறினார்கள்:

ஜமாஅத்தில் உட்பூசல்கள் ஏற்படுகின்ற இந்த வழிமுறை சரியானதல்ல. சஹாபிகளும் தங்களுக்குள் பரஸ்பர அன்பையும், சகோதரத்துவத்தையும் உருவாக்கினார்கள். மேலும் ஒரு ஜமாஅத்தாக ஆகிவிட்டனர்.

**தனது ஜமாஅத்தின் உறுப்பினர்கள் தங்களுக்குள் பரஸ்பரம் சஹாபிகளைப் போன்று சகோதரத்துவ பந்தத்தை நிலை நாட்ட வேண்டும் என்றே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் விரும்புகின்றார்கள்.**

கூறினார்கள். இதேபோன்று இறைவன் இந்த அமைப்பை நிலைநாட்டினான். (அதாவது சஹாபிகளின் அமைப்பை போன்ற அமைப்பை உருவாக்கியுள்ளான்). மேலும், அதுபோன்ற சகோதரத்துவத்தை அவர்கள் இங்கு நிலைநாட்ட வேண்டும். இறைவன் மீது எனக்கு அதிக நம்பிக்கை உள்ளது. கூறினார்கள்: பாருங்கள்! ஒருவர் மற்றவருக்கு எதிராக முறையீடு செய்வதும், மனதை புண்படுத்துவதும், கடுமையாக பேசி ஒருவர் மற்றவரின் உள்ளத்திற்கு வேதனையை ஏற்படுத்துவதும், பலவீனமானவர்கள் மற்றும் வறியவர்களை ஏளனமாக கருதுவதும் பெரும் பாவங்களாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 348-349, பதிப்பு 1984)

எனவே ஒருவர் மற்றவரின் உணர்வுகளை கருத்தில் கொள்வது உயர் நல்லொழுக்கம் ஆகும். இவை நடைபெறும் போதும் தான் நம்மால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்ய முடியும். அப்போதுதான் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுடன் அன்னாரின் ஜமாஅத் தொடர்பாக செய்துள்ள வாக்குறுதிகளின் அருட்களுக்கு நாம் வாரிசுகளாக ஆக முடியும். அப்போதுதான் அல்லாஹ்வின் அருட்களை பெறக் கூடியவர்களாக நாம் ஆக முடியும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் நேரத்தில் இந்தியாவின் பல்வேறு சமுதாயங்களும், கோத்திரங்களும் ஜமாஅத்தில் இணைந்தன. தற்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம் செய்யப்பட்ட வாக்குறுதிகளுக்கு ஏற்ப உலகின் பல்வேறு சமுதாயங்கள், கோத்திரங்கள் மற்றும் இனத்தைச் சார்ந்தவர்களை அல்லாஹ் ஜமாஅத்தில் இணைத்துவிட்டான். மேலும் இணைத்து வருகின்றான். எனவே, இது பல்வேறு சமுதாயங்கள் மற்றும் இனங்களைச் சார்ந்த மக்கள் மீது அல்லாஹ் செய்த அருளாகும். அவன் அவர்களுக்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஜமாஅத்தில் இணைவதற்கும், அன்னார் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் ஜமாஅத்தில் இணைவதற்கும் நற்பேறு வழங்கியுள்ளான். மேலும், ஒரு சமுதாயமாக்கிவிட்டான்.

நீங்கள் பரஸ்பரம் சகோதரர் ஆவீர்கள் என்று இதன் பக்கம் அன்னார் (அலை) கவனமூட்டியுள்ளார்கள். கூறினார்கள்: தந்தை வேறு வேறு நபர்களாக இருக்கலாம். ஆயினும், இறுதியில் உங்கள் அனைவரின் ஆன்மீகத் தந்தையும் ஒருவரே ஆவார். அவர்கள் ஒரே மரத்தின் கிளைகள் ஆவர். (மல்ஃபூஸாத் தொகுதி 3, பக்கம் 349, பதிப்பு 1984)

நாம் எந்த இனத்தைச் சார்ந்தவர்கள்? நாம் வெள்ளை இனத்தைச் சார்ந்தவர்களா? அல்லது ஆஃப்ரிக்கர்களா? அல்லது பாகிஸ்தானியர்களா? அல்லது இந்தியர்களா? அல்லது ஹஸ்பானி இனத்தைச் சார்ந்தவர்களா? என்பதற்கெல்லாம் அப்பாற்பட்டு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைந்த பிறகு நாம் ஒரு ஆன்மீகத் தந்தையின் பிள்ளைகளாகிவிட்டோம். மேலும் இனம், நிறம், சமுதாயதம் போன்றவற்றின் காரணமாக எவருக்கும் எவர் மீதும் எந்த மேன்மையும் இல்லை. ஏனெனில், **நமது ஆன்மீகத் தந்தை ஒருவரே ஆவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது இறுதி குத்பாவில் இந்த அறிவிப்பையே செய்துள்ளார்கள். எனவே நாம் இந்த விஷயத்தை புரிந்தவாறும், ஒன்றுபட்டவாறும் பணி செய்வோம் என்றால் மேலும், ஒருவர் மற்றவரின் உணர்வுகளை கருத்தில் கொள்வோம் என்றால் பின்னர் இன்ஷாஅல்லாஹ் நமக்கு அல்லாஹ் முன்னேற்றங்களை வழங்கிக் கொண்டே இருப்பான்.**

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நமது ஜமாஅத்தை அல்லாஹ் ஒரு முன்மாதிரியாக ஆக்க விரும்புகின்றான். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 9, பதிப்பு 1984)

வெறும் மேலோட்டமான பேச்சுகள மூலமும், ஆழமான அமல்கள் இல்லாமலும் மனிதனால் முன்மாதிரியாக திகழ முடியுமா? முன் மாதிரியாக திகழ்வதற்கு பெரும் ஜிஹாது செய்ய வேண்டியுள்ளது. மிகவும் உழைக்க வேண்டும்.

தமது இறை வணக்கங்களின் தரத்தை நிலைநாட்டியவாறும், தமது நல்லொழுக்க நிலைகளை சரிசெய்தவாறும், பரஸ்பரம் அன்பு, சகோதரத்துவத்தின் தொடர்புகளை நிலைநாட்டியவாறும் நாம் முன்னுதாரணமாக ஆகி வருகின்றோமா? இல்லையா? என்று பார்க்க நேரிடும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் நமது உயர் தரங்களை அடைவதன் பக்கம் மேலும் கவனமூட்டியவாறு கூறுகின்றார்கள்: அல்லாஹ் இறையச்சமுடையவர்களை நேசிக்கின்றான். அனைவரும் இறைவனின் மகத்துவத்தை நினைவு கூர்ந்தவாறு அனைவரும் பயபக்தியுடன் இருங்கள். அதாவது அல்லாஹ்வின் மீதான அச்சத்தையும், பயத்தையும் உள்ளத்தில் உருவாக்குங்கள். அனைவரும் அல்லாஹ்வின் அடியார்கள் என்பதை நினைவிற் கொள்ளுங்கள். எவர் மீதும் அநீதியிழைக்காதீர்கள். அவசரம் காட்டாதீர்கள். மேலும் எவரையும் ஏளனமாக பார்க்காதீர்கள். கூறினார்கள்: ஜமாஅத்தில் ஒருவர் மோசமானவராக இருந்தால் பின்னர் அவர் அனைவரையும் அசுத்தமாக்கிவிடுகின்றார். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 9, பதிப்பு 1984)

இதன் தொடர்ச்சி : 9ம் பக்கம்...

**National Watch Company**

**Sales & Service**



**B. Mohamed Adil**

93632 06679
99433 38000

196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM
99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT
99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad